# பின்காலனிய இலங்கையில் சமயங்களின் அரசியல்

ஆயர்.வ.தியோகுப்பிள்ளை
அறக்கொடைப் பேருரை
19.10.2023



கலாநிதி தி.செல்வமனோகரன்
முதுநிலை விரிவுரையாளர்
இந்துக் கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



யாழ்.மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியம்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை
(முன்னாள் யாழ். ஆயர்: 1973 - 1992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்காலனிய இலங்கையில் சமயங்களின் அரசியல்

ஆயர்.வ.தியோகுப்பிள்ளை
அறக்கொடைப் பேருரை
19.10.2023

கலாநிதி தி.செல்வமனோகரன்
முதுநிலை விரிவுரையாளர்
இந்துக் கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்.மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னீடு

மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் அவர்களே, யாழ்ப்பாண மறை மாவட்ட குருக்கள் ஒன்றியத் தலைவர் அவர்களே, செயலாளர் அவர்களே, இங்கு வருகை தந்திருக்கின்ற வணக்கத்துக்குரிய அருட்தந்தையர்களே, மதகுருமார்களே, ஏனைய அன்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது மாலை வணக்கம். இலங்கை வரலாற்றில் சுதேசமக்களை மொழி, சமயம் என்னும் அடையாள அரசியலின் வழி ஒடுக்கமுற்பட்ட "பேரினவாத அரசு" ஸ்திரப்படுத்தப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராகப் பணிபுரிந்தவர் வணக்கத்துக் குரிய வ. தியோகுப்பிள்ளை அவர்கள். 1973இல் இருந்து 1992 வரையான தன் தலைமைத்துவத்தை இம்மண்ணுக்கு வழங்கியவர். இவர் கல்விப்பணி (ஆசிரியப்பணி, நூலாக்கப்பணி, நிர்வாகப்பணி), சமூகப்பணி, சமயப்பணி எனப் பன்முகத்தளத்தில் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர் சுதேசப் பொருளாதாரக் கொள்கை உடைய அரசு, திறந்த பொருளாதாரக் கொள்கை யுடைய அரசு, இனவாத அரசு, இந்திய அரசு எனப் பல அரசுகளை யும் அவற்றின் ஆட்சியியலையும் கண்டவர். சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சி, தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சி என்பவற்றையும் இலங்கை இராணுவம், இந்திய இராணுவம் என்பவற்றையும் கண்டவர். பின்காலனிய இலங்கையில் சமயங்களின் இயங்கியலை ஒரு மதகுருவாக, சமூகப் பணியாளராக, சிறுபான்மையினராக கண்டு அனுபவித்தவர். கொடூரயுத்த சூழலில் அதிகாரத்துவத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக அவர் குரல் கொடுத்தமை யாவரும் அறிந்ததே. விடுதலை இறையியலின் பால் அதிக ஈடுபாடு உடைய ஆயரவர்களது இந்நினைவுப் பேருரையை "பின்காலனிய இலங்கையில் சமயங்களின் அரசியல்" எனும் தலைப்பில் நிகழ்த்துவதை யிட்டு நான் மகிழ்வடைகின்றேன். இந்த உரையை நான் நிகழ்த்துவதற்குக் காரணமாயிருந்த அருட்தந்தையர்க்கு எனது மனமார்ந்த நன்றி.

## அறிமுகம்

உலகின் சிறியதீவுகளில் ஒன்றான இலங்கை, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவகையில் இந்து சமுத்திரத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இயக்கர், நாகரின் தேசமான இலங்கை, விஜயனின் வருகை, அவனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்களையும் திருமணஞ்செய்ய பாண்டிய தேசத்துத் தமிழிச்சிகளின் வருகை என்பவற்றோடு தன் வரலாற்றைத் தொடங்குகிறது. நாகர்கள் தமிழர்கள் எனத் தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் கருதுவது குறிப்பிடத் தக்கது. மகாவம்சப் புனைவு சிங்களவர்களை ஆதிக் குடிகளாகச் சித்திரிக் கிறது. உலர்வலயம், ஈரவலயம் என்பனவும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நால்வகை வளங்களும் நிறைந்த முத்தும் மாணிக்கமும் கொழிக்கின்ற தேசம். இது விவசாயநாடு; கைத்தொழில் பல செய்யத்தக்க வளங்களும் தனக்கான தனித்துவமான அம்சங்களும் உள்ளடக்கியது என்பதால் என்றும் பலகூறாகப் பிரிந்தே இருந்தது. பல இராட்சியங்கள் ஒருங்கே இருந்து வந்துள்ளன. அடிக்கடி அந்நிய ஆக்கிரமிப்புக்கும் உள்ளாகி வந்தது. இங்கு சிங்களவர், தமிழர், முஸ்லீம் பின்னர் பறங்கியர் எனும் மக்கள் பிரிவினர் வாழ்ந்து வருகின்றார்கள்.

கீழைத்தேச ஆய்வியல் புலத்தில் இன்று அதிகம் பயன்படுத்தும் சொற்களுள் ஒன்றாகக் காலனியம் விளங்குகின்றது. ஒரு சமூக ஆதிக்க அமைப்பை முழுமையாக வலியுறுத்தும் ஒரு நவீனவகையாக "காலனியம்" எனும் பதம் பயன்படுத்தப்படுகின்றது. 1870 - 1905களுக்கு இடைப்பட்ட காலத்தில் காலனிய ஆய்வுகள் பன்முகத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டதையும் அது பின் நிகழ்ந்த உலக மகாயுத்தங்களிலும் இடைப்பட்ட காலத்தில் அந்நிய ஆக்கிரமிப்புக்குள்ளான அனைத்து நாடுகளிலும் செல்லாக்கு பெற்று காலனியவாதிகள், காலனிய எதிர்ப்பு, காலனிய இயங்கியல் எனப் பன்மைத் துவ ஆய்வுகளாகப் பரிணமித்தன. (பிபன் சந்திரா, 2012, பக்13-14) ஒரு சமுதாயத்தை மற்றொரு சமுதாயம் சுரண்டும், அதன்மீது தன்னாதிக்கம் செலுத்தும், அதன் விருத்தியைக் குன்றச் செய்யும் நடத்தையாக, செயல் முறையாகக் காலனியத்தை விளக்கலாம். காலனியாதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகள் அல்லது சமூகங்கள் தம் மரபார்ந்த தன்மையை, பண்பாட்டை, இழந்து புதிய சூழமைவுக்கு விரும்பியோ விரும்பாமலோ உட்படுகின்றன. அது நவீனமயவாக்கமாகச் சுட்டப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகள் கீழைநாடுகளின் மீது செலுத்திய ஆதிக்கம் இதற்குத்தக்க சான்றாகும்.

காலனியாதிக்கவாதிகள் தமக்கான உற்பத்தி, உழைப்பு என்பவற்றைப் பெற, தமது பிம்பமாக இந்நாடுகளை, சமூகங்களைக் கட்டமைத்தனர். இங்கு அடிமைப்படுத்தல், உபரியைச் சுரண்டித் தன்வயப்படுத்துதல் என்பன பிரதான செயல்முறைகளாக அமைந்திருந்தன. காலனிய முதலாளித்துவ பொருளா தார வளர்ச்சி என்பது "நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பொசிதல் போல" ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகளுக்கும் சிறிதளவேனும் பயனளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையுடனான மனிதனின் ஊடாட்டம் மகிழ்ச்சியையும் நிறைவையும் மாறாக அதிர்ச்சியையும் பயத்தையும் ஒருங்கே உருவாக்கியது. இயற்கை பற்றிய மனிதமன விசாரத்தின் முடிவின்மையே "சமயம்" உருவாவதற்கும் அதன் இருத்தலுக்கும் அடிப்படையாயிற்று. சமயத்துக்கான செயல்நிலைகள் நம்பிக்கையையும் நம்பிக்கைகள் வழிபாடுகளையும் வளர்த்தெடுத்தன. இவற்றின் வழி கதைகள், உருவங்கள், இனக்குழு, இனக்குழுத் தலைமைத்துவம், நிலப்பிரபு, குறுநிலஅரசு, அரசு, பேரரசு எனும் மனித நிர்வாக - தேசக்கட்டுமான வளர்ச்சி சமயங்களிலும் பிரதிபலித்தன. பெருஞ்சமயங்கள் உருவாயின. அரசுகளால் சமயங்களும் சமயங்களால் அரசுகளும் வழிநடத்தப்படும் செயல்முறை உருவானது. இதனூடாக சமயம் அதிகாரத்துவ சக்தியாக மாறியது. ஆன்மிக உயர்வு, வாழ்வியல் விழுமியங்கள் என்பவற்றுக்கு அப்பால் பரம்பல், அதிகாரம், சுரண்டல் வடிவமாகவும் மாறியது. சுட்டித்து உரைக்கின் சமயங்கள் "அரசியல்" செய்யமுற்பட்டன. அவை உள்ளக அரசியலாகவும், புறநிலை அரசியலாகவும் பரிணமித்தன. குறித்த சமயம் பல்வேறு பிரிவுகளாக பிரிந்து வளர்நிலை பெற்றிருக்கும். வணங்கும் தெய்வம் ஒன்றாக இருக்கும். அவை தம்முள்ளே எது சிறந்தது எனும் கருத்தியல் போட்டிக்கு உள்ளாதல் தன்னை நிலை நிறுத்த முற்படல் என்பன உள்ளக அரசியல் ஆகிறது. குறித்த சமயம் பிற சமயங்களுடன் போட்டியிடல், பிரசாரம் செய்தல், தன்னை நிறுவ வாதம் நிகழ்த்தல், அரச அதிகாரத்தை - அங்கீகாரத்தைப் பெறுதல் மக்கள் மயப்படுத்தப் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தல் என்பன புறநிலை அல்லது வெளியக சமய அரசியலாகும்.

இலங்கை தொன்மைக்காலத்தில் இருந்து இந்து (சைவ) சமயம், பௌத்தசமயம் என்பவற்றைக் கொண்டமைந்திருக்கிறது. இதில் எது தொன்மைச் சமயம் என்பதில் இருபிரிவினருக்கும் இன்றுவரை கருத்து வேறுபாடு உண்டு. வியாபார நடவடிக்கைகளின் வழி இஸ்லாமும் பின் கிறிஸ்தவமும் இலங்கையில் பரவலாக்கம் உற்றன. இந்த நான்கு சமயங்களுக்கும் இடையிலான, இந்நான்கு சமயங்களினதும் "சமய அரசியல்" செயல் நிலைகள் பின்காலனிய இலங்கையில் எவ்வாறு நிகழ்ந்து வருகின்றது என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

## 1.1 காலனிய கால இலங்கை

இந்துசமுத்திரத்தின் நித்திலமாக வர்ணிக்கப்படும் இன்றைய "இலங்கை" என்பதே காலனியவாதிகளின் கண்டுபிடிப்புத்தான். "ஒன்றிணைந்த இலங்கை" என்பது சாத்தியமற்ற ஒன்றாகத்தான் இருந்துவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மன்னர்களின் ஆட்சியில் ஒன்றிணைக்கப்பட்டாலும் அது நீடித்திருக்க வில்லை. ஐரோப்பியர்கள் 1505 இல் இலங்கைக்கு வருகைதந்த போது அது கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி என மூன்று இராட்சியங்களாகப் பிரிந்திருந்தது. கோட்டை யாழ்ப்பாண இராட்சியங்களை ஐரோப்பியரும் பின்பு ஒல்லாந்தரும் கைப்பற்றியாண்டாலும் பிரித்தானியர்களே 1815இல் கண்டி இராட்சியத்தை வீழ்த்தி, ஒன்றிணைந்த இலங்கையை உருவாக்கி நீண்டகாலம் ஆட்சிபுரிந்தனர். ஆகவே இன்றைய இலங்கை என்பதே பிரித்தானிய காலனித்துவத்தின் விளைவு ஆகும்.

இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நடை பெற்ற ஒரு சில கலகங்களைத் தவிர பிரித்தானிய காலனியத்துக்கு எதிரான அரசியல் எதிர்ப்புக்கள் பெரிதாக நடைபெற்றதாக அறியமுடிய வில்லை. காலனித்துவத்துக்கு எதிராக இலங்கையர்கள் மேற்கொண்ட பெருநடவடிக்கை அல்லது துலங்கல் என்பது பண்பாட்டெழுச்சியேயாகும். (கார்த்திகேசு சிவத்தம்பி, 2000, ப.9). பிரித்தானியக் காலனியம் இலங்கை யின் பல்வகைச் சமூகங்களின் பாரம்பரிய அமைப்பு முறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. தனக்குத்தேவையான புத்தியுழைப்பாளர் களையும், உடலுழைப்பாளர்களையும் உருவாக்கவும், காலனியத்தை நிலை பேறடையச் செய்வதற்கும் தேவையான "நவீன" கல்விமுறையை மிஷனரி களின் ஊடாக அறிமுகம் செய்தது. மிஷனரிகள் தத்தம் சபைகளுக்கு இலங்கையர்களை மதமாற்றம் செய்வதற்கான கருவியாக இதனைப் பயன்படுத் திக் கொண்டனர். ஆங்கிலக் கல்வி, கிறிஸ்தவர் எனும் அடையாளங்கள் அரச உத்தியோகத்துக்கு உரிய தகுதிகளாகக் கட்டமைக்கப்பட்டன. புதிய மத்திய தரவர்க்கம் இதன்வழி இலங்கையில் உருவானது.

இலங்கையின் பலபாகங்களிலும் முஸ்லீம்கள் வாழ்ந்துவரினும் அவர்கள் காலனித்துவக் கவர்ச்சிகளுக்கு உடனடியாக உட்படவில்லை. ஆயினும் ஒடுக்குதலுக்கு உள்ளானதன் பின் அறிஞர் சித்திலெப்பையின் வருகை முஸ்லீம் பண்பாட்டை முனைப்புறுத்தும் செயல் நிலையாக அமைந்து. அவரது முஸ்லீம் நேசன் பத்திரிகைக்கு இதில் பாரிய பங்குண்டு (கார்த்திகேசு சிவத்தம்பி, 2000, பக்.11,12). இவ்வாறு முனைப்புற்ற சுதேச சமய, பண்பாட்டு மறுமலர்ச்சியாக்கம் இலங்கைத் தேசியத்தைக் கட்டி யெழுப்ப முற்பட்ட அதேவேளை அது இன, சமய முரண்பாடுகளையும் தோற்றுவிக்க முற்பட்டது. எந்த ஒரு சமயத்தவரும் பிறிதொரு சமயத்த வருடன் இணைந்து தேசியவுணர்வுடன் பணிபுரிந்ததாக அறியமுடியவில்லை, சேர் பொன்.இராமநாதன் மட்டுமே பௌத்த பிரமஞான சபையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதுகாலம் அங்கம் வகித்ததாக அறியமுடிகிறது.

சமய எதிர்ப்பியங்களுக்குப் பின்னால் அரச அதிகாரம் அல்லது பொருளாதார அதிகாரம் என ஏதோ ஒன்று இருக்கும். காலனித்துவ கால இலங்கையின் குடித்தொகையில் வெறும் பத்து சதவீதத்திலும் குறைந்தவரான கிறிஸ்தவர்களே செல்வாக்குச் செலுத்தினர். படித்த கிறிஸ்தவ மேட்டுக் குடியினர் அரசியல் தலைமைத்துவத்திலும் உயர்பதவிகளிலும் கோலோச்ச, மத்திய வர்க்கத்தினர் அடுத்தடுத்த நிலைப்பதவிகளை அலங்கரித்தனர். அதிலும் அவர்கள் சிங்கள மேட்டுக்குடியல்லாத "கராவ" சாதியைச்சார்ந்த புரட்டஸ்தாந்து கிறிஸ்த்தவர்களாக இருந்தனர். தமிழர்களிலும் இந்நிலையை காணமுடிந்ததெனினும் உயர்சாதியினரே கற்றவர்களாக இருந்தமை குறிப் பிடத்தக்கது. அரச உத்தியோகத்தவர்களாக, கராவ சாதியினரும், தமிழரும் இருந்தமை சிங்கள, பௌத்த மறுமலர்ச்சியாளர்களுக்கும் அவர்களுக்குப் பொருளாதார உதவி புரிந்த புதிய முதலாளிகளுக்கும் உவப்பாக இருக்கவில்லை. இதன் விளைவாக கிறிஸ்தவ மேலாண்மைக்கு எதிராக சிங்கள பௌத்த தேசியவாதத்தை முன்வைத்து "எதிர்ப்பியக்கம்" வழிநடாத்தப்பட்டது. பௌத்தகல்வியும் சிங்களமொழியும் முதன்னிலைப் படுத்தப்பட்டது.

ஆனால் இதற்குச் சமாந்தரமாக சைவத்தமிழ் தரப்பில் இயங்கிய ஆறுமுகநாவலர் இவ்வடிப்படைவாதத்தைக் கடந்து கிறிஸ்தவ எதிர்ப்பியக் கத்தை கிறித்தவப்பாணியிலேயே முன்னெடுத்தார். பாரம்பரிய சைவசமயக் கல்வியை நவீன பாடசாலைகளை நிறுவி முன்னெடுத்தார். சைவாங் கிலப் பாடசாலையையும் நிறுவினார். நவீன கல்விக்கொள்கையை உள் வாங்கி பாடசாலைகளில் கற்பிக்க வழிசெய்தார். சைவ, தமிழ் இலக்கண, இலக்கியத்துக்கு மட்டுமல்லாமல் பூகோளசாஸ்திரத்திற்கும் பாடநூல்கள் எழுதினார். ஆங்கிலமொழியியலாளர்கள் முன்வைத்த, உரைநடைப் பயன்பாட்டையும் நிறுத்தற் குறிகளையும் உள்வாங்கி தமிழ் உரைநடை யாக்க நூல்களைத் தந்தார். உண்மையில் சுதேச சமயங்களுள் முதற் சீர்திருத்தத்தை ஏற்படுத்திய, "புரட்டஸ்தாந்து சைவத்தை" உருவாக்கியவராக ஆறுமுகநாவலர் காணப்படுகின்றார். அதேவேளை நாவலர் உண்மைக் கிறிஸ்த்தவர்களை மதித்தார்: நட்புப் பாராட்டினார். போலிச்சைவர்களை, பிராமணர்களை கடும்வார்த்தைகளால் விமர்சித்தார்.

சமகாலத்தில் பௌத்த சூழலில் பிரிவேனாக்கல்வி முறையே ஊக்குவிக்கப்பட்டது. மரபுமாறா மணமே பௌத்த, இஸ்லாமியச் சூழலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. (ஜெயவர்த்தன, குமாரி., 2011, பக்.8-10) கிறிஸ்தவ மிஷனரி அமைப்புக்கு எதிராக பௌத்த சங்கங்களும், இஸ்லாமியப் பள்ளிகளும் அமைப்பு ரீதியாகத் தொழிற்பட்டன. சைவர்களிடம் இவ்வாறான அமைப்பு எதுவும் இருக்கவில்லை. நாவலர் எனும் தனிமனிதரே இயங்கினார். இக்காலகட்டத்திலிருந்து காலனிய ஆட்சி முடிவுறும் வரை இம்முத்தரப் பினரும் பிரித்தானிய ஆதிக்கத்துக்கு எதிராகத் தொழிற்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அதிகாரிகளுக்கும், கிறிஸ்தவத்துக்கும் எதிராகவே தொழிற்பட்டனர். நாவலர், இராமநாதன், அநகாரிக தர்மபாலா போன்றோர் எழுதிய கடிதங்கள் இதற்குத் தக்கசான்றுகளாகத் திகழ்கின்றன.(கைலாச பிள்ளை,த., 1925, Harishchandra, walisinha, 1908, pp.79-80)

பிரித்தானிய காலனிய ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறிய பலர் சாராய குத்தகையாளர்களாக, நிலவுடமையாளர்களாக புதிய முதலாளிகளாக உருவெடுத்தனர். ஒருகட்டத்தில் சிங்கள, பௌத்த எழுச்சிக்கு இவர்களே உந்துசக்தியாகவும் மாறினர். காலனியவாதிகள் வகுத்த சட்ட திட்டங்களுக்கு அமைவாகவும் விசுவாசமாகவும் இருந்த புதிய வர்த்தக முதலாளித்துவவாதிகள் சுதேச சமயங்களான பௌத்த, இந்து, இஸ்லாமிய சமயங்களின் மறுமலர்ச்சிக்கு ஆதரவளித்தனர். வணிகசமூகத்தின் நிதிப் பங்களிப்பின்றி காலனிய சமய மறுமலர்ச்சி சாத்தியமுற்றிருக்க முடியாது. (ஜெயவர்த்தன, குமாரி, 2015, பக்.272-280) பௌத்தத்துக்கு புதிய பொருளா தார வகுப்பினரான சாராயக் குத்தகைக்காரர்கள், கொவிகம எனும் பெரும்விவசாயக் குடிகளல்லாத "கராவ" உள்ளிட்ட பிற சாதியினர், (Wickremeratre L.A., 1969, p.13) பெருந்தோட்ட உடைமையாளர்கள், உயர்தொழில் புரிந்தோரும் நிதியுதவி புரிந்தனர். அதேபோல சைவ சமய மறுமலர்ச்சிக்கு யாழ்ப்பாணத்துச் செட்டிமார்களும், படித்த புதிய மத்திய தரவகுப்பினரும் அரச உத்தியோகத்தரும் ஆதரவளித்தனர். (கைலாசபதி, க., (பதி), 1979, பக்.176-184) இஸ்லாமியரைப் பொறுத்தவரை அவர்களிடமே உள்ளூர் வணிகம் இருந்தது. சமயமாற்றமும் பெரிதும் நிகழவில்லை. நவீனத்துவத்தை நோக்கி பிறசமயத்தாரைப் போன்று அவர்கள் விரைந்து நகரவும் இல்லை. நகரச் செட்டிமார்களுக்கும் ஆறுமுக நாவலருக்கும் 1842களில் கெட்டித்த உறவு ஏற்பட்டு சைவமறுமலர்ச்சி ஏற்பட்டது போன்று 1860களில் சிங்கள, புதிய வர்த்தகர்களுக்கும் பௌத்த மறுமலர்ச்சி இயக்கங் களுக்கும் இடையிலான உறவு ஸ்திரநிலைப்பட்டது.

இதனூடாக பௌத்தபிக்குகள் பௌத்த மறுமலர்ச்சியை மரபுவழி விவாதங்கள், மரபுவழிப் பள்ளிகளினூடாக முன்னெடுத்தனர். குணானந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரர், ஸ்ரீ சுமங்கலதேரர் போன்ற தேரர்களால் நடாத்தப்பட்ட புகழ்பெற்ற ஐந்து விவாதங்களும் பெருவெற்றியைப் பெற்றுத்தந்த பாணாந்துறை விவாதமும் சிங்கள பௌத்த கருத்தியலாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் நம்பிக்கையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து வந்த கால கட்டத்தில் இலங்கைக்கு வருகை தந்த ஹென்றி ஒல்கொட் (Henry Steel Olcott), ஹெல்லன்னா பிளவட்ஸ்கி (Helena Petrovna Blavatsky) ஆகிய இருவராலும் உருநிலைப்படுத்தப்பட்ட தியோசோபிக்கல் (Theosophical Society) எனும் பிரம்மஞான சபை (1880) மூலம் பௌத்த நவீனத்துவம் நிகழ்த்தப்பட்டது. இச்சபையின் எழுச்சியானது பௌத்தர்கள் தம்மை ஆரியர்களாக நம்பவும் மேலை மரபை நிராகரித்து கீழை மரபுகளைப் பின்பற்றவும் சிறப்பானதெனக் கருதவும் முற்பட்டதோடு தென்னாசிய சமூகத்தை புனைவு நவிற்சியாகக் கற்பனை செய்ததாகவும் அறியமுடிகிறது. (ஜெயவர்த்தன, குமாரி, 2015, பக்.274-275) இந்தக் கருத்தியல்களின்வழி நவீனகல்வி, நவீனபௌத்தப் பாடசாலைகள் என்பவற்றை உள்ளூர் வர்த்தகர் களும் (Jayavvardena,k., 1972, pp. 46 - 51) இணைந்து உருவாக்கினர். இவற்றின் வழி பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் கடமை "ஆரிய சிங்கள மக்களுக்குப்புத்தரால் அளிக்கப்பட்டது" என்ற கருத்தியல் வலியுறுத்தப்பட்டது. "தம்மதுவீபம்" எனும் தர்மத்தீவாகிய இலங்கைக்கு பௌத்தத்தைப் பாது காக்கும் கடமை உள்ளது என வலியுறுத்தப்பட்டது. இது சிங்கள பௌத்த மக்களின் மனதில் ஆழப்பதியப்பட்டது.

இவ்விரு செயல் நிலைகளிலும் வெளியிடப்பட்ட பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள், படைப்புக்கள் பௌத்தர்களை புனிதத்துவமானவர்களாக உருநிலைப்படுத்தின. அதேவேளை கிறிஸ்தவர்களைப் பகைவர்களாகச் சித்திரித்தன. இம்மனப்பாங்கின் விருத்தி 1893இல் பௌத்த - கத்தோலிக்க கலவரத்தை உண்டாக்கியது. பிழையான புரிதல்களால் நிகழ்ந்த "கொட்டகேன" கலவரத்தில் ஒருவர் இறந்ததாகவும் முப்பது பேர் காயமடைந்ததாகவும் பதிவாகியுள்ளது. (Jayavaradena, K., 1972, p.50) இதுவே காலனிய காலத்தில் நிகழ்ந்த முதற்பெருஞ் சமயக்கலவரமாகும். தியோசொபிக்கல் ஊடாக உருவான அநகாரிக தர்மபாலா அவ்வமைப்பின் மேற்குமயமாதலை நிராகரித்து அதன்னின்றும் வெளியேறினார்.

நாவலர் 1878க்கு முன் புரட்டஸ்தாந்து சைவத்தை உருவாக்கியது போல இவர் புரட்டஸ்தாந்து பௌத்தத்தை 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத் தில் உருவாக்கினார். பௌத்த பழைமைவாதத்தை நவீன கருவி கொண்டு புதுக்கினார். பௌத்தத் திரட்சியை உருவாக்கப் பாடுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மபாலா, பௌத்தசமயம், மொழி, பொருளாதாரம், அரசியல் எனும் பல தளங்களில் சிங்களவர் முன்னேற வேண்டும் என வற்புறுத்தினார். பெண்கள் கற்புடை மாந்தராய்த் திகழ வேண்டும் என்றார். மனித ஒழுக்கவியலை, பௌத்த ஒழுக்கவியலை வெளிப்படுத்தும் ஒருவராக அவர் திகழ்ந்தார். மஹாபோதிசங்கத்தைக் கொழும்பிலும் கல்கத்தாவிலும் நிறுவினார். இதற்கான நிதியுதவியை தியோசோபிஸ்ட்டான அமெரிக்கப் பெண்மணி மேரி போஸ்டர் வழங்கினர். (Mary faster) toq;fpdhh;. (Jayawardena, K., 1995, p.p . 164 - 167) மதுவிலக்கு இயக்கத்துக்கு ஆதரவளித்தார். புதிதாக உருவான குட்டி சிங்களபூர்சுவாக்களின் ஆதரவு இவரது புரட்டஸ்தாந்து பௌத்தத்துக்கு நிறையவே கிடைத்தது. 1892ல் நடைபெற்ற பௌத்த ஊர்வலத்துக்கு தடைவிதிக்கப்பட்டபோது ஆட்சியாளர்க்கு அவரெழுதிய கடிதம் முக்கியமானது.

> "மேன்மை தங்கிய அரசராகிய தங்களின் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்கள் சிங்கள பௌத்தர்களுக்கு கொடுமை செய்கிறார்கள். சிங்கள பௌத்தர்கள் தங்களின் புனிதமானதும் வரலாற்றுப் பெருமை உடையதுமான சமயத்தில் தலையிடுவதையிட்டு உள்ளம் கொதிக்கின்றனர். நிர்வாக உத்தியோகத்தர்கள் மது, அபின், மாட்டிறைச்சி ஆகியவற்றை மக்களுக்குக் கொடுக்கிறார்கள். புனித நகரத்தில் இருந்து மது, குடிபானங்களை விற்கும் கடைகள், அந்நிய கிறிஸ்தவக் கோயில்கள் என்பவற்றை அகற்ற வேண்டும் என்பதையே பௌத்தர்கள் கோரி நிற்கின்றனர்.
>
> (ஜெயவர்த்தன, குமாரி, 2015, ப.272 (மொ,பெ.,க.சண்முகலிங்கம்).

மேற்படிக்கடிதத்தின் சாராம்சத்தைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

1) மேன்மைதங்கிய அரசரை, அவரது காலனிய ஆட்சியை ஏற்று விசுவாசமாக இருக்கும் மனப்பாங்கு
2) அரச உத்தியோத்தர்களே குழப்பவாதிகள்
3) பௌத்தத்துக்கு மாறானவை மது, அபின், மாட்டிறைச்சி
4) பௌத்த புனிதநகரில் இருக்கக்கூடாதவை
5) "சிங்களபௌத்தம்" எனும் தொடர் பயன்படுத்தப்படுகிறது.

காலனிய எதிர்ப்பு, என்பதின்றி கிறிஸ்தவ சமய எதிர்ப்பு எனும் "அரசியல்" நடவடிக்கையின் வடிவமாகவே இது இருப்பதும் கிறிஸ்தவர்களான அரச உத்தியோகத்தர்களை குற்றவாளிகளாக்குவதும் பஞ்சசீல பௌத்தக் கொள்கையை நிலைநாட்டுவதும் கொழும்பை பௌத்தத்தின் புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகராகச் சுட்டுவதும் அதன் புனிதத்தைக் கெடுப்பதாக மது, மாட்டிறைச்சிக் கடைகளும் தேவாலயங்களும் இருப்பதும் சுட்டப்படுகிறது. காலனிய சமய அரசியலின் முதல் வடிவமாக, சான்றாக இக்கடிதம் அமைகிறது. புனித நகரில் இருந்து அகற்றப்பட்ட வேண்டிய, மது, மாட்டிறைச்சிக் கடைகளோடு இணைத்து கிறிஸ்தவதேவாலயத்தையும் கூறியிருப்பது அவரது காழ்புணர் வினதும் சமயவரசியலினதும் உச்சவடிவமேயாகும். இதற்கு அடுத்த வருடமே கொட்டகேனா பௌத்த, கிறிஸ்தவக் கலவரம் இடம்பெற்றது. அந்த சமய அரசியலின் நீட்சியே 125 வருடங்களின் பின் அத்தேவாலயத்தின் மீது நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதல் எனலாம். சிங்கள பௌத்தர்கள் என்ற கையாளுகை தமிழ்பௌத்த வரலாற்றை இருட்டடிப்புச் செய்கிறது. சிங்கள பௌத்தர்கள் அநகாரிக தர்மபாலாவினால் அப்பாவிகளாகவும் துன்புறுத்தப்படுகின்ற, ஒடுக்கப்பட்டசமூகத்தவர்கள் எனச் சித்திரிப்பதுமாக அமைந்துள்ளது. (Guruge,A.,(ed), 1965, p.532)

அநகாரிக தர்மபாலா புரட்டஸ்தாந்து பௌத்தத்தை உருவாக்கிய அதேவேளை அதனை "சிங்கள பௌத்தமாக" உருநிலைப்படுத்த மிகுந்த பிரயத்தனங்களைச் செய்தார். அவருடைய சமய அரசியல் உள்ளக அரசியலின் பால் பல்வேறு மாற்றங்களை "மீண்டும் கூடு திரும்புதல்" எனும் தத்துவத் தளத்திலிருந்து மாறுபடாத வகையில் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை இலங்கை சிங்கள பௌத்த நாடு, பௌத்தத்தை காக்கும் பொறுப்பு இலங்கைச் சிங்களவர்க்கே உண்டு என வலியுறுத்தினார். இலங்கையரை அவர் சிங்களவர், அசிங்களவர் (சிங்களவர் அல்லாதவர்) எனச்சுட்டும் கருத்தியலை உருவாக்கினார். இந்திய வர்த்தகர்களான போரா, பார்சிகன் மற்றும் தமிழ், முஸ்லீம் மக்களை எதிரிகளாகச் சித்திரித்துத் தாக்குகிறார். முஸ்லீம் மக்களை "ஹம்பயே" என்று வெறுப்புடன் குறிப்பிடுகிறார். தமிழர்களை "ஹடிதெமிழு" என்ற சிங்களப் பதத்தினூடாக "கரடு முரடானவர்கள்" என்கிறார். (கணநாத் ஒபயகேர, நிட்ச்சேர்ட் கொம்பிறிஜ், 2005, பக்.117) இவர்களையும் கிறிஸ்தவர்களையும் இலங்கையின் அந்நியர்களாகவும் சிங்கள நாட்டை சுரண்டுபவர்களாகவும் எதிர்நிலைப்படுத்தினர்.

அந்நியர்களது சுரண்டலை வெற்றி கொள்ள பொருளாதார, வாழ்வியல் விழுமியங்களை கட்டாயப்படுத்தினார். நாவலர் முன்வைத்த சைவ மறுமலர்ச்சிக்கான சைவசமய விழுமிய ஒழுக்கவியலுக்கும் இவற்றுக்கும் அதிக வேறுபாடு இருக்கவில்லை. கிறிஸ்தவப் பாதிரிமார்களை ஒத்த நவீன சிங்களத் துறவிகளை உருவாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே சமகாலத்தில் இரண்டு முக்கியமாக விடயங்கள் நிகழ்ந்தன: ஒன்று சிக்காக்கோ மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் புகழ்பெற்று இந்தியா திரும் பும் போது இலங்கைச் சைவத்தமிழர்கள் அவருக்கும் பெருவரவேற்பு அளித்தனர். "வேதாந்தியான விவேகானந்தரை சைவசித்தாந்த மரபினராக யாழ்ப்பாணத்தார் வரவேற்றது முரண்நகை" எனக் கிறிஸ்தவப் பத்திரிகைகள் பலவாறு எழுதின. இந்துசாதனம் பல சமாதானங்களைக் கூறினும் இக்கேள்வி பலரிடம் தொக்கிநின்றது. இத்தளத்தில் காலூன்றி நின்று காசிவாசி செந்தி நாதையர் சைவத்தை "சைவவேதாந்தம்" எனும் கருத்துருவாக்கத்துக்கு இட்டுச்சென்றார். இரண்டாவது 1915இல் நிகழ்ந்த முஸ்லீம் பௌத்தசிங்களக் கலவரம் ஆகும். இலங்கையின் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை உருவான தமிழ் பூர்சுவாக்கள் தோட்டச்செய்கை, அரச உத்தியோகம் என்பவற்றினூடாகவும் சிங்கள் பூர்சுவாக்கள் சாராயக்குத்தகை, சுரங்கத் தொழில், தோட்டச் செய்கையூடாகவும் வருமானத்தைப் பெற்றனர். முஸ்லீம்கள் உள்ளூர் வர்த்தகத்தில் கோலோச்சினர். பிரித்தானியர், வட, தென்னிந்திய வணிகர்கள் மற்றும் முஸ்லீம்கள் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்திலும் மொத்த வர்த்தகத்திலும் ஈடுபட்டனர். இவர்களோடு தமிழர்களும், சிங்கள வர்களும் போட்டிபோடும் நிலையில் இருக்கவில்லை (ஜெயவர்த்தன, குமாரி, 2011, பக். 15 - 17) அதேவேளை தமிழர்கள் (கிறிஸ்தவ, சைவ) உயர்நிலை, கீழ்நிலை எனும் இருதளங்களிலுமான அரச உத்தியோகங்களை அலங்கரிப்பவர்களாக இருந்தனர். இவ்வாறான சூழல் பௌத்தசிங்களப் பெரும்பான்மைக்கு ஆற்றாமையை தந்தது.

இது இலங்கையில் சிறுபான்மையினருள் சிறுபான்மையாக அக்காலப் பகுதியில் இருந்த வர்த்தகப்பெரும் முதலாளிகளான முஸ்லீம்களுக்கு எதிரானதாக சிங்கள சிறிய முதலாளிகளை ஒன்று திரட்டியது. தர்மபாலாவின் சமய, இனவாத வரிகள் இதற்கு வலுவூட்டின. வர்த்தகப் போட்டியோடு இலங்கையில் 1915இல் ஏற்பட்ட பணவீக்கம், பொருள்களின் விலையேற்றம் சாதாரண மக்களையும் இத்திரட்சிக்குள் உள்வாங்கியது. "மண்ணின் மைந்தர் கள்" முஸ்லீம்களை எதிரிகளாகக் கருதினர். (Gurugе, A., (ed), 1965, p.540) சிங்களஜாதி, லக்மின போன்ற பத்திரிகைகள் இந்த சமய, இனவாதக் கருத்துக்களை வளர்த்தெடுத்தன. இது 1915இல் பெரும் இன, சமயக்-கலவரத்தை உருவாக்கியது. பலர் சுடப்பட்டனர், கலவரத்தில் மடிந்தனர், சிறைப்பிடிக்கப்பட்டனர். காலனிய காலத்தில் நிகழ்ந்த முதற்பெருங் கலவரம் இதுவே, இன, மத நல்லிணக்க அடிப்படையில் தூது சென்ற சேர்பொன். இராமநாதனின் கருத்தியலை ஏற்றுக் கொண்ட பிரித்தானிய அரசு சிங்களத் தலைவர்களை விடுதலை செய்தது. சிங்களத் தலைவர்கள் இராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதனைக் கொண்டாடினர். இக்கொண்டாட்டம் தமிழ்பேசும் மக்களாக ஒன்றித்திருந்த முஸ்லீம், சைவ மக்களிடையே முதன்முதல் இடைவெளி ஒன்றை ஏற்படுத்தியது. முஸ்லீம்கள் பலர் இராமநாதனை எதிரியாகவே இன்றுவரை கருதுகின்றனர்.

காலனியகால சிங்களச் சமூகத்தின் கிராமிய ஐதிகக் கதைகளில் வரும் வீர புருஷனான தியசேனவே "தர்மபாலா" என சிங்கள பௌத்த மக்கள் நம்பினர். அவர்கூறிய கடந்தகால - துட்டகைமுனுவின் பொற்காலத்துக்கு உயிர்த்துவம் அளிக்க மக்கள் திரண்டனர். குழந்தைகளின் பெயர்கள், ஆடை அணிகலன் முதலான பல விடயங்கள் சுதேசத்தன்மையுறத் தொடங்கின. அவர் முன்வைத்த தேசியவாத உணர்வு, கடந்தகால வரலாற்றுப் பெருமிதங்கள், சமூக, அரசியல் தன்மையுடைய இவ்வுலக வாழ்வை முதன்மைப்படுத்தும் பௌத்தத் துறவு என்பன சிங்களமக்களை ஈர்த்தன. இதனூடாக தர்மபால சிங்களச் சமூகத்தில் அடையாள அரசியலைத் (Identity affirmation) தோற்றுவித்தார். நடைமுறைப்படுத்தினார். "அறியாமைக்கு உட்பட்ட சிங்களவர்களை" தனித்துவமான இலங்கையர்களாக்குவதற்கான கூட்டு அடையாளமாக (Collective Identity) "சிங்களபௌத்தர்" எனும் விடயத்தை தொடர்ந்து கூறிவந்தார். மீளமீள வலியுறுத்தி அதனை இனக்குழும அடையாளமாக்கினார். இவ்வாறான கருத்தியல்களும் வீடற்ற (அநகாரிக) தர்மபாலவை (தர்மத்தின் காவலனை) வீரபுருஷன் தியசேனவாக்கியது. இக்கருத்தியல்கள் பின்காலனிய இலங்கையில் பெரும் அதிர்வுகளை உருவாக்கின.

காலனிய காலத்தில் கிறிஸ்தவமே மேலானது; ஏனைய சமயங்கள் யாவும் கீழானவை; சாத்தானுக்குரியவை எனக் கருதப்பட்டன. காலனியவாதிகள் கறுப்புத்தோல் கொண்ட பிரித்தானிய கனவான்களை உருவாக்க விரும்பினர். ஃப்ரான்ஸ் ஃபனான் "கறுப்புத் தோலும் வெள்ளை முகமூடிகளும்" எனக் குறிப்பிடுவதை ஒத்ததாக இது அமைந்துள்ளது. (ஃபனான் ஃபிரான்ஸ், 2002, ப.11) கிறிஸ்தவத்தை விசுவாசிக்கும் ஆங்கிலக் கல்வியறிவும் நவீன கல்வியும் பெற்ற இளந்தலைமுறையினைக் கண்டடைந்து அவர்களில் மேலைத்தேச கலாசார அடையாளங்களைப் பதித்தனர். அரச உயர்பதவிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அரச இயந்திரத்துக்கு அவர்கள் விசுவாசிகளாயினர். ஆயினும் சுதேசசமயங்களின் எழுச்சி இவற்றைக் கட்டுக்குள் கொண்டுவந்தது. விடுதலையுணர்வு, அடையாளத்தைத் தக்கவைத்தல் எனும் கருத்துருக்கள் வலுப்பெற்றன. ஆயினும் படித்த மேட்டுக்குடியினருடன் புதிதாகக் கிடைத்த நவீன கல்வியும் அரச உத்தியோகமும் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியதரவர்க்கத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது. காலனிய அரச இயந்திரத்தை இவ்விரு வர்க்கமுமே தாங்கிப் பிடித்தன. அதனுள் பெரும் பாலானோர் தமிழர்களாக இருந்தமை பௌத்தசிங்களவர்களுக்குப் பல்வேறு அச்சங்களை ஏற்படுத்தியது.

1. காலனியவாதிகள் தமிழர்களிடம் நாட்டை ஒப்படைத்து விடுவர் அல்லது இருசாராரும் இணைந்து தம்மை அழிக்கவோ அன்றி நாட்டைவிட்டுத் துரத்தவோ கூடும் என்ற அச்சம்.

2. இந்நாட்டில் குடியேறியோரான தமிழர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களுக்குப் போக்கிடம் உண்டு. சிங்களவர்களாகிய நமக்கு இலங்கையை விட்டால் போவதற்குப் வேறு தேசம் இல்லை.

3. நாங்களே மண்ணின் மைந்தர்கள் இலங்கைக்கு உரியவர்கள்.

போன்ற விடயங்கள் மீளமீளக் கூறப்பட்டு சிங்கள பௌத்தமனங்களில் பதிவு செய்யப்பட்டன.

ஆட்சியாளர்கள் புதிதாக அறிமுகப்படுத்திய யாப்பு, புதிய கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தியது. சர்வசன வாக்குரிமை முதலான விடயங்கள் முதன்மை பெற்றன. ஆயினும் 1946இல் உருவான சோல்பரியாப்பு சிங்கள மேட்டுக்குடியினரதும் அரச பதவியிலுள்ளோரினதும் அபிலாஷைகளை உள்ளடக்கிய ஒன்றாகக் காணப்பட்டது. 1948இல் இலங்கை சுதந்திரமுற்ற போதிலும் காலனிய கட்டமைப்பின் நடைமுறை அப்படியே பின்பற்றப்பட்டது. இதனை வெளிப்படையாகக் கூறின் கிறிஸ்தவ காலனியமானது 1948இல் இலங்கையை சிங்கள பௌத்த காலனியத்திடம் ஒப்படைத்தது. சிங்கள, படித்த, மேலைதேச நுனிநாக்கு ஆங்கிலமும் ஆடைமுறைகளும் முற்றுமுழுதாக மாறியது. அவர்கள் தத்தம் சமயத்துக்கு மீள மாறினர். குறிப்பாக படித்த, அரசியலிலீடுபட்ட சிங்களக் கிறிஸ்தவர்கள் தத்தம் "பதவி" ஆசைக்காக மேலைத்தேச கலாசார ஆடைகளையும் கனவான் தோற்றத்தையும் துறந்து காலனிய காலத்தில் பௌத்த சிங்கள மக்களின் ஆடையாக உருநிலைப் படுத்தப்பட்ட வேட்டி, நஷனலை தம்மடையாளமாக்கினர். இதற்குச் சிறந்த உதாரணம் பண்டாரநாயக்கா ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 பின்காலனிய கால இலங்கையும் சமயங்களின் அரசியலும்

சோல்பரி யாப்பின் வழி சுதந்திர இலங்கை வழிப்படுத்தப்பட்டது. இந்தியாவில் உடனடியாக மாற்றங்கள் எல்லாத்தளங்களிலும் ஏற்பட்டது. ஆனால் இலங்கையில் மாற்றங்கள் எதுவும் பெரிய அளவில் நிகழவில்லை. "புதிய மொந்தையில் பழைய கள்" என்ற நிலையே காணப்பட்டது. சமூகக்கட்டு மானத்தை அதன் அடிக்கட்டுமானத்திலிருந்து நீக்குவதன் மூலம் சுதேசத்தைச் சுதந்திரமாகக் கட்டமைத்தல் எனும் காலனிய நீக்கம் இடம்பெற வேண்டிய சூழலில் அதனை அப்படியே கடைப்பிடிக்கின்ற அரசியற்போக்கே காணப் பட்டது. 1948இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து 1956 வரையான காலப்பகுதி "நீர்வழிப் படூஉம் புணை போல" காலனியப் பாதை வழியேதான் இலங்கை பயணித்தது. ஆங்கிலமே ஆட்சிமொழியாகவும் இருந்தது. 1920களில் உருவான வேலையின்மை, பணவீக்கம் முதலான பல்வேறு அம்சங்கள் இந்தியர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றவேண்டும் என்ற மனப்பாங்கை உருவாக்கியது. இன்னும் நுணுக்கமாகக் கூறின் "சிங்கள ஜாதி" பத்-திரி கையின் ஆசிரியரும் நாவலாசிரியருமான பியதாச சிறிசேன "கரை யோர முஸ்லீம்களிடமும் கொச்சிக் காரரிடமும் அந்நியரிடமும் கொடுக் கல் வாங்கல் வைத்திருக்க வேண்டாம்" என்கிறார். முஸ்லீம்கள், கொச்சி-க்காரர் எனும் மலையாளிகள், அந்நியர்களான வெள்ளைக்காரர்கள் உள்ளிட்டவர்களுடனான பொருளாதாரத் தொடர்பு சிங்கள் பௌத்த மக்க-ளின் அடிக்கட்டுமானச் சிதைவாக இவரால் நோக்கப்படுகிறது. (ஜெயவர்த் தன, குமாரி, 2011, ப.18) டொனமூர் யாப்பின் வருகை இந்திய வம்சாவழி யினரான மலையகத்தமிழருள் ஒரு பகுதியினருக்கு வாக்குரிமை வழங்கி யது. அதனை சிங்கள பௌத்தத் தலைவர்கள் கூட்டாக நிராகரித்தனர். இனவாதக் கருத்துக்கள் வெளிக்கிளம்பின. இலங்கைத் தமிழர்கள் "கள்ள மௌனம்" காத்தனர். பெருந்தோட்டத்தில் பல்வேறு போராட்டங்களும், இந்தியாவுக்குத் திருப்பியனுப்புதல் முதலான பல்வேறு நடவடிக்கைக-ளும் உரையாடல்களும் தொடர்ந்து நடைபெற்றன. சுதந்திர இலங்கையின் முதல் வன்முறை இந்திய வம்சாவழியினரை ஒடுக்குவதில் கண்ணுங் கரு-த்துமாக இருந்தமையாகும்.

மகாவம்ச காலத்திலிருந்து சிங்கள பௌத்தர்களின் பிரதான பகையாளிகளாகச் சித்தரிக்கப்பட்டு வந்த இலங்கைத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் காலனிய காலத்தில் முரண்பாடு கள் ஏற்பட்டதாக அறியமுடியவில்லை. இரு இனக்குழுக்களும் தத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாள மீட்டுருவாக்கத்தில் தத்தம் வழியில் ஈடுபட்டன. தமிழர்கள் அந்நியர்களாகச் சித்திரிக்கப்படவில்லை. அநகாரிகா "தமிழர்கள் உயர்நிலை பெறுகிறார்கள்" என்ற கருத்தியலை முன்வைத்த போதும் அது தமிழர்களுக்கு எதிரானதாகத் திரும்பவில்லை

சிங்களம், தமிழ் என்பன மட்டும் கற்றவர்கள் பாதிப்படைவதை உணர்ந்து அரசகருமமொழியாக சிங்களம், தமிழ் வரவேண்டும் என்ற கோரிக்கை 1942இல் வலுப்பெற்றது. ஆனால் ஐம்பதுகளில் இந்நிலைப்பாட்டில் மாற்றம் நிகழத் தொடங்கியது. தமிழர்களின் அரச நிர்வாக அதிகாரமயப்பட்ட செல்வாக்கு, கல்வியறிவு, அரசஉத்தியோகம் என்பன கவனத்தில் கொள்ளப் பட்டன. சிங்களபௌத்தர்களுக்கு இலங்கையில் மட்டுமே இடமுண்டு என்ற எண்ணம் வலுப்பெற்றது. பிரித்தானிய ஆட்சியதிகாரமரபு, பண்பாடு என்பன திட்டமிட்டு செல்வாக்கிழக்கச் செய்யப்பட்டன. பிரித்தானியர் களுக்குப் பதிலாக பிரித்தானியக் கல்விப்பாரம் பரியத்தையுடைய ஆங்கிலத் தில் பேசுகின்ற பழுப்புத்துரைமார்களின் ஆட்சியாகவே சுதந்திர இலங்கையாட்சி அமைந்திருப்பதாக சிங்கள மக்கள் எண்ணத்தலைப் பட்டனர். (எலிசபெத் நிசான், ஸ்டிராட்,ஆர், எல்., 2005, பக்27) அநகாரிக தர்மபாலாவின் சிங்கள பௌத்த தேசியவாதமே தங்களைப் பாதுகாக்கும் வளப்படுத்தும் எனத் தேரர்கள் கருதினர்.

மக்களுக்கு அது பிரசாரம் செய்யப்பட்டு வளர்க்கப்பட்டது. 1953 - 1956க்கு இடைப்பட்ட காலத்தில் அரசகரும மொழியாக சிங்களம் மட்டும் வரவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

## சிங்களம் மட்டும்

சிங்கள பௌத்த எழுச்சி என்பது இலங்கையில் பௌத்தம் பெரும்பாலும் சிங்களமொழியினூடாகப் பரவியதால் ஏற்பட்டது. அவ்வாறே சைவத் தமிழ் என்பது சைவம் (இந்து) தமிழ்வழி அதிகம் பரவியதால் ஏற்பட்ட சிந்தனையாகும். முஸ்லீம்கள் தமிழ்பேசும் மக்களாக வாழ்ந்தார்கள். கிறிஸ்தவர்கள் இரு மொழி - இன அடையாளங்களையும் பெற்றிருந்தாலும் அவ்வவ்வின, மொழி சார்புடைய மக்களாக வாழ்ந்தார்கள். சிங்கள பௌத்த தேசிய எழுச்சிக்கும் "சிங்களம் மட்டும்" என்ற கோரிக்கைக்கும் பின்னணியில் இருந்த காரணிகளை பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) 2500 ஆவது புத்த ஜெயந்திக்கொண்டாட்டமும் பௌத்த எழுச்சியும்
2) இலங்கையில் பௌத்தத்துக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை எனும் அதிதிருப்தி
3) ஆங்கிலம் பேசும் சுதேச கிறிஸ்தவர்களை புறமொதுக்கல்
4) டி.சி.விஜயவர்த்தனா, எழுதிய புத்த கோயிலில் கிளர்ச்சி எனும் நூல்

இலங்கை வரலாறு, சிங்களவர் வரலாறு, பௌத்த வரலாறு எனும் முக்கூட்டின் 2500வது வருடமாக "1956" சித்திரிக்கப்பட்டது. பௌத்த, சிங்கள ஐதிகக் கதைகள், உண்மை வரலாறாக மீளமீள உரைக்கப்பட்டன. இது சிங்கள பௌத்த மக்களிடம் ஒருவகைப் பூரிப்பையும் உள்ளக் கிளர்ச்சியையும் ஊட்டியது. 70% சிங்களக் குடிப்பரம்பல் பெரும்பான்மை எனும் உண்மை "பெருமிதமாக" உணரப்பட்டது. இது பல்வேறு கட்டுக் கதைகளையும் உருவாக்கியது.

இதன் பேறாக சிங்களம் மட்டும் மசோதா அறிமுகமாகியது. இதற்கெதிரான சிறுபான்மை அல்லது தமிழ் பேசும் மக்களின் போராட்டங்கள் வன்முறையால் இலங்கை முழுவதும் தடுக்கப்பட்டது. இவ்வன்முறையில் 150க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ஜெயவர்த்தன, குமாரி, 2011, ப.101) பண்டா- செல்வா ஒப்பந்தம் இதனை ஓரளவு தணித்ததெனினும் சிங்களவர்களின் "கண்டியாத்திரை" இதற்கு எதிராக நிகழ்த்தப்பட்ட ஒன்றாகும். குறிப்பாக சிங்கள பௌத்த தேரர்கள் இவ் வெதிர்ப்பு ஊர்வலத்தில் முன்னின்றுழைத்தமை புதிய "சமய அரசியலின்" அத்தியாயத்தைத் தொடக்கிவைத்தது.

மொழிவழி சார்ந்த அடுத்த பிரச்சனையாக சிங்கள "ஸ்ரீ" எதிர்ப்பியக்கம் தமிழர்களால் நிகழ்த்தப்பட்டது. இதற்கு எதிராக தமிழ்எழுத்து அடையாளங்களை கொழும்பில் சிங்களக் குழுக்கள் சில அழிந்தன. இவ்விரு செயல்களும் "தார் பூசி அழிக்கும்" நிகழ்வாக அமைந்தது. இவ்விரு நிகழ்வுகளின் அடுத்தகட்ட நகர்வாக அன்பும், அகிம்சையும், சகோதரத்துவமும் மிக்க பௌத்த தேரர்கள் பண்டாரநாயக்கா வீட்டைச் சுற்றிவளைத்து "பண்டா - செல்வா" ஒப்பந்தத்தைக் கைவிடும்படி வற்புறுத்தியதன் ஊடாக அவ்வொப்பந்தம் கைவிடப்பட்டமை பௌத்த சமய அரசியலை வெளிப் படையாக்கியது.

இதன் பேறாக 1958.05.23 இல் இலங்கையின் பல பாகங்களிலும் கலவரங்கள், வன்முறைகள் நிகழ்ந்தேறின. தமிழர்கள் கொல்லப்பட்டனர்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்கள் சூறையாடப்பட்டன: அழிக்கப்பட்டன. சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் துரித வளர்ச்சி - கலவரங்கள் - தமிழர் எதிர்நிலைப்பாடு - பிக்குகளின் அதிகார எழுச்சி என்பவற்றின் கூட்டுநிலையின் அடுத்தகட்டமே 1959இல் இலங்கைப் பிரதமமந்திரியாக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா ஒரு பிக்குவினால் சுட்டுக் கொல்லப்பட்டமையாகும். இதன்பின் ஏறத்தாழ 15 வருடங்களுக்கு மேல் சிங்கள, தமிழ் கலவரங்கள் நிகழவில்லை. ஒருவகை மௌனமும், வெளியும் காணப்பட்டது. பிராந்திய, சமய, மொழிப் பாகுபாட்டின்றி அரச உத்தியோகத்தர்கள் எங்கும் பணியாற்றினர்.

## சமயக்கல்வி

இதேவேளை காலனிய கால கிறிஸ்தவத்துக்கு எதிராக சுதேச சமய நிறுவனங்கள் உருவாகி சமயக்கல்விக்கு முதன்மையளித்தன. மிஷனரிகளின் வழியில் பாடசாலைகளை உருவாக்கின. நாவலரும் அவர்பரம்பரையினரும் சைவபரிபாலனசபை, சைவ வித்தியாவிருத்திச்சங்கம் உள்ளிட்ட நிறுவனங்களும் 250க்கு மேற்பட்ட பாடசாலைகளை நிறுவி சைவத்தை வளர்த்தனர். சைவாசிரிய கலாசாலைகள் சமய ஆசிரியர்களை உருவாக்கியது. முஸ்லீம்களும் முஸ்லீம் பாடசாலைகளை அமைத்து சமயபாடத்தை முதன்மைப்படுத்தினர். ஆக, இலங்கையர் ஒவ்வொருவருக்கும் சமயவுணர்வு பிறப்பிலிருந்து குடும்பம், சமூகம், கல்வி எனும் பன்முகத்தளங்களில் ஊட்டப்பட்டது. பின்காலனிய இலங்கையரசு அறுபதுகளில் இலவசக் கல்வித் திட்டத்தின் வழி பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்பும் சமயக் கல்விக்கு முதன்மை கொடுக்கப்பட்டது. அது பல்கலைக்கல்வியாக வளர்த்தெடுக்கப்பட்டு இன்று துறைகளாக, பீடங்களாக, தனிப் பல்கலைக் கழகங்களாக வளர்ந்து நிற்கின்றன. ஆயினும் அது "பௌத்த"சமயத்துக்கே முன்னுரிமை அளித்து நிற்பது சமய அரசியலின்வழி புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும்.

## சமயங்களின் நிலை

சோல்பரி யாப்பு (1947) சிங்கள பௌத்தத்தைப் புறக்கணித்து விட்டதான கருத்தியல் சிங்களவர்களிடம் மேலோங்கியிருந்தது. ஆகவே இலங்கை அரசியல் யாப்பில் சிங்கள பௌத்தத்திற்கு "உரிய இடம்" (Rightful place) வழங்கப்படவேண்டும் என்பதில் கட்சிபேதம் கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையாளர்களாக சிங்கள அரசியல் வாதிகள் திகழ்ந்தனர். அதனைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் அரசின் தலையாய கடமையாகக் கருதப்பட்டது. இன்னும் ஒருபடி மேலே சென்று இலங்கை அரசியலில் சிங்கள பௌத்தத்திற்கே "முதன்மையான இடம்" (Foremost place) வழங்கப்பட வேண்டும் என்ற முடிவை எடுக்கின்றனர். 1972, 1978 அரசியமைப்புக்கள் இதன்வழி உருவாக்கப்படு கின்றன. பௌத்தத்தை முதன்மைப்படுத்துவதோடு பௌத்த சாதனத்தைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் அரச கடமை எனப்பட்டது. அத்தோடு "அனைத்து மதங்களையும் நம்பிக்கைகளையும் மதிப்புடனும் கௌரவத்துடனும் பாகுபாடு ஏதுமின்றி அரசியலமைப்பில் உள்ளபடி பாதுகாத்தலும் அரசின் கடமை" எனக் கூறப்பட்டுள்ளது. இது சிறுபான்மைச் சமூகத்தை திருப்திப்படுத்த நிகழ்த்திய சமய அரசியலே.

இலங்கை மதச்சார்பற்ற - அனைத்து மதங்களையும் கௌரவப் படுத்தும் அரசை உடையது என்றும் தாராண்மைவாத ஜனநாயக அரசு என்றும் காட்டுவதற்கு எடுக்கும் முயற்சியே இதுவாகும். சிங்களபௌத்த பெரும்பான்மை எனும் அடித்தளத்தில் இருந்து எழும் பின்காலனிய இலங்கை அரசு சிங்களபௌத்த தேசிய வாதத்தின் அரசியல், பண்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுப்பதாக அவர் கூறுவது மிகச் சரியானதே. இந்தப் பின்னணியை வைத்துத்தான் உயங்கொட, இலங்கையானது ஜனநாயகப் பண்புகளை - தாராண்மை வாதத்தை (Liberalisation) இழந்து தாராண்மை யற்ற (De-Liberalistion) அரசாக மாற்றமடையச் செய்யும் திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக உயங்கொட கூறுகிறார். (உயங்கொட, ஜயதேவ, 2016, பக்.24 - 25)

ஐரோப்பிய, ஒல்லாந்தர்கால காலனியத்தில் சுதேச வழிப்பாட்டுத் தலங்கள் இடித்தகற்றப்பட்டன. அவ்விடங்களில் கிறிஸ்தவ தேவாலயங்கள் கட்டப்பட்டன. ஒல்லாந்தரால் கத்தோலிக்கத் தேவாலயங்களும் இடிக்கப் பட்டன. பின்னவை மீளுருப்பெறத் தொடங்கின. பின்காலனியச் சூழலில் இவற்றின் எழுச்சி, மறுசீரமைப்பு என்பன சமயப்பிரசாரம், சமூக அந்தஸ்து, அடையாளம், நம்பிக்கை என்பவற்றின் வழிமுன்னெடுக்கப்பட்டது. "கிறிஸ் தவப் பிரார்த்தனைகளை சுதேசமொழிகளில் நடாத்துதல், சுதேசபண்பாடு களை உள்வாங்கி கத்தோலிக்கத்தைப் பரப்புதல்" எனும் முக்கியமான முடிவு வத்திக்கானால் அறிவிக்கப்படுகிறது. தமிழ்சைவ நிலவுடமை யாளர்கள் முன்னிறுத்திய தைப்பொங்கல் "தமிழர் இயற்கை வழிபாடாக - பண்டிகையாக" கத்தோலிக்கர்களால் உள்வாங்கப்பட்டது. தோரணமும், பூரணகும்பமும் தமிழர் கலாசாரச் சின்னங்களாக மாறின. தேவாலய சுருவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வீதியுலா வந்தன, சைவர்கள் கோயிற் பெரிய மணியை கிறிஸ்தவர் களிடம் இருந்து உள்வாங்கினர்.

பௌத்தமும் கிறிஸ்தவமும் இஸ்லாமும் தம்மைத் தற்காத்துக் கொள்வதில் அதிக அக்கறை காட்டின. அதில் வெற்றியும் கண்டு வருகின்றன. அவற்றின் நிறுவனமயப்பட்ட தன்மை அதற்கு அடிப்படை. ஆனால் இந்துக்களிடம் அவ்வாறான அமைப்புமுறைமை இல்லை. அதீத சுதந்திரம் அதன் பலமாகவும் பலவீனமாகவும் இருக்கிறது. இதனால் தான் சிங்கள பௌத்தர்கள் இந்துக்கடவுளர்களையே (கதிரகம தெய்யோ, பத்தினி தெய்யோ, விநாயக தெய்யோ..) தம்வசப்படுத்தி விகாரை களின் பரிவார தெய்வங்களாக்கியுள்ளனர். அதிலும் குறிப்பாக கதிர்காம வள்ளிமலை சிங்களவர்களுக்கு சாசனம் செய்யப்பட்டுள்ளது. (சபாநாதன், குல., 1970) கதிர்காம நிலம், நிர்வாகம் முழுவதும் சிங்கள மயப்படுத்தப் பட்டுள்ளது. கதிரமலையில் விகாரை நிமிர்ந்து நிற்கிறது. கதிர்காமத் தில் வழிபாடு இயற்றுவோருள் பெரும்பான்மையினர் சிங்கள பௌத்தர்களே. வழிபாடு ஆற்றும் முறைமையும் சிங்களத்தையே அதிகம் சார்ந்திருக் கின்றது. கதிர்காமம் எனும் இந்துக்கோயில் பௌத்தமயமாக்கலுக்கு உட்பட்டுவிட்டது.

## தேசியக்கொடி

பின்காலனிய இலங்கைக்கான எல்லா இலங்கையர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தேசியக்கொடியை உருவாக்க தேசியக்கொடிக்கான குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதில் சுதேச மூவினமக்களும் அங்கத்துவம் பெற்றனர். அது பெரும்பான்மையினத்தின் "சிங்கள பௌத்த" கொடியாகவே கட்டமைக்கப்பட்டது. அதுவே இன்றுமுள்ள இலங்கையின் தேசியக்கொடி யாகும் அது வாளேந்திய சிங்கத்துக்கும் அரசமிலைக்கும் முதன்மை கொடுத்து "சிங்கள பௌத்தக்" கொடியாகவே அசைகிறது. வைத்திலிங்கம் இதனை "அரசியல் வாழ்வில் வெளியே உதைத்துத் தள்ளப்பட்ட தமிழ் மக்களினதும் ஏனைய சிறுபான்மை மக்களினும் நிலையினை இக்கொடி புலப்படுத்துகிறது" என்கிறார். (வைத்திலிங்கம், செ., 1951, ப.6)

## அரசியல் கட்சிகளின் சமய அரசியல்

பௌத்த சமயத்தை இலங்கையின் அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான பெருங்கருவியாகப் பெரும்பான்மைக் கட்சிகள் பயன்படுத்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியதில் இருந்து சிறுபான்மைச் சமயங்களைக் கொச்சைப்படுத்தும் நிகழ்வுகளும் சமாந்தரமாக நிகழ்ந்தன. இலங்கையில் மதச்சார்பின்மை வெறும் வாய்ச்சொல்லாகவே இருந்து வருகின்றது. பண்டாரநாயக்க வின் மரணம் பிக்குவால் நிகழ்ந்ததைத் தொடர்ந்து பௌத்த பிக்குகளின் அரசியல் நடவடிக்கை தடைப்பட்டிருந்தது. அவர்களின் நேரடியான அரசியல் பிரவேசத்தையோ - பிரசாரத்தையோ பிரதான கட்சிகள் விரும்பமில்லை. இச்சூழலில் 1962இல் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான - புரட்சிக்கான முயற்சி ஒன்றினை இராணுவ, பொலிஸ் அமைப்புகளின் கூட்டுத்திட்டம் ஒன்று இடம்பெற்றதாகவும் அதனைச் செய்த உயரதிகாரிகள் சிங்களக் கிறிஸ்தவர்கள் என்றும் பௌத்தத்தின் பாதுகாவலரான தாம் அதனை தடுத்ததாகவும் அக்கால அரசாங்கம் அறிவித்திருந்து. (சத்தியசீலன்,சா.,1994, ப.86) இது சமய அரசியல் இலங்கையரசியலில் பெற்றிருந்த இடத்தைத் தெளிவாக்குகிறது. இதன்வழி சிங்கள பௌத்தர்களே இலங்கை பாதுகாப்புத்துறையில் உயர் பதவிகளை பெறும் வாய்ப்பு எழுதாத சட்டமாக்கப்பட்டது. 1965இல் நடைபெற்ற அரசியல் பொதுத்தேர்தலோடு பௌத்த சங்கங்கள் வலிமை யுடையனவாக வளர்ச்சி பெற்றன.

மல்வத்த பீடாதிபதி பொருள்முதல்வாதிகளான மார்க்ஸியவாதி களை மிகக் கடுமையான மொழியில் கண்டித்தார். அதேவேளை இடது சாரிகளின் கூட்டான ஐக்கிய தேசியக்கட்சி கத்தோலிக்கத் திருச்சபையினரதும் மேலைத்தேச முதலாளித்துவத்திலும் அமெரிக்காவினதும் கையாட்களாக சித்திரிக்கப்பட்டனர். எது எவ்வாறு இருந்த போதும் “சிங்கள பௌத்த” கருத்தியல், கட்சிகளாக, சங்கங்களாக, விகாரகளாக எனப் பல்தரப்பிலும் சிங்கள மக்களின் மனதிலும் நிலைபேறு பெற்றது. தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் 1965இல் தேசிய அரசாங்கம் அமைத்த ஐக்கிய தேசியக்-கட்சி பௌத்தத்துக்கு முன்னுரிமை அளித்து ஏனைய சமயங்களுக்கான சுதந்திரம், மதிப்பளித்தல் விடயத்தைக் கைவிட்டது. திருகோணேஸ்வரப் பகுதியை புனித பிரதேசமாக்க இந்துக்கள் எடுத்த முயற்சியைத் தடுத்து நிறுத்தியமை இதற்குத் தக்கசான்றாகும். பௌத்த புனிததினமான “போயாதினம்” (பூரணை) அரச விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. இலங்கை யின் பிரதான கட்சிகள் சமய அரசியல் பௌத்தத்தை நிலைநிறுத்து வதில் காலந்தோறும் குறியாக இருந்தன.

இலங்கையரசு இனவிகிதாசார தேர்தல் முறை, வெட்டுப்புள்ளி, வேலைவாய்ப்பின்மை, சிங்கள, பௌத்த அதிகாரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் சமயத்துக்கப்பால் இந்து, கிறிஸ்தவம், முஸ்லீம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகுபாடின்றி ஒன்றிணைந்து ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சில அசம்பாவிதங்களை அடிப்படையாகக் கொண்டு முஸ்லீம் மக்களை வெறுங்கையராக யாழ்ப்பாணப் பிராந்தியத்தை விட்டு போராளிகள் வெளியேற்றினர். இந்த வெளியேற்றம் தமிழ் - முஸ்லீம் என்ற பிரிவினை வாதத்தை முழுமையாக ஏற்படுத்தியது. பல்வேறு தளங்களில் உலக அரங்கில் பாதிக்கப்பட்ட முஸ்லீம்கள் உலகின் ஒரு இனம் என்ற அடிப்படை வாத கருத்தியலின்வழி தம்மைத் தனிக் குழுமமாகக் கட்டமைத்தனர். தனி அரசியல் கட்சிகள் உருவாயின. தமிழ், முஸ்லீம் பகைமைகளும் தீவிரமாக வலுபெற்றன. யாழ்ப்பாண வெளியேற்றத்தை போராளிகளும் யாழ்ப்பாண புத்திஜீவிகளும் "தவறு" எனக்கூறி மன்னிப்பும் கோரினர். கிழக்கில் முஸ்லீம்கள் தமிழர்கள் மீது நிகழ்த்திய பாதகச்செயல்களுக்கான மன்னிப்புக் கோரலோ அன்றி அதன் விளைவுகள் பற்றிய உரையாடல்களோ இன்றுவரை நிகழ்த்தப்படவில்லை.

## தமிழர் விடுதலைப் போராட்டம்

தமிழர் விடுதலைப் போராட்டத்தை இந்து, கிறிஸ்தவ சமயப் பாகுபாடின்றி தமிழர்களாய் இணைத்தே இளைஞர்கள் மேற்கொண்டனர். வழிபாட்டுத் தலங்கள் சமய பேதமற்ற வாழ்விடங்களாயின. வழிபாட்டிடங்கள் குண்டு வீச்சுத்தாக்குதல்களுக்கு உள்ளாயின. நவாலி கிறிஸ்தவ தேவாலயத் தாக்குதலும் தமிழ்க் கிறிஸ்தவர்களின் மரணங்களும் நிகழ்ந்த காலத்திலும் ஏனைய தேவாலயங்களும், சைவாலயங்களும் இடிக்கப்பட்டபோதும் "கள்ள" மௌனம் காத்த சிங்களக் கிறிஸ்தவ அமைப்புக்கள் 2019இல் நிகழ்த்தப் பட்ட, கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலய ஈஸ்டர் தாக்குதலுக்கு எதிராக பெரும் எதிர் வினைகளை ஆற்றின. குறிப்பாக கத்தோலிக்க கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் 2020இல் புதிய அரசாங்கத்தின் வரவுக்கே காரணமாய் இருந்ததோடு சர்வதேச விசாரணைக்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை புறங்கையால் தட்டிவிட்டு ஈஸ்டர் தாக்குதலை மட்டுமே முதன்மைப்படுத்துகிறார். இங்கு ஆயரின் மதவுணர்வுக் கப்பாலான சிங்கள, கிறிஸ்தவ இனவுணர்வு மட்டுமே மேம்பட்டு நிற்கின்றது.

அதேவேளை தமிழ்க் கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவ பாதிரிமார்களும், போதகர்களும் சிறுபான்மையினரின் விடுதலையை அவாவி, ஒடுக்குமுறைக்கு எதிராக "விடுதலையிறையியல்" கோட்பாட்டை செயல்முறைப்படுத்தியவர் களாக இருக்கின்றனர். இதற்கு உதாரணங்களாக ஆண்டகை தியோகுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை, மன்னார் ஆயர் இராயப்பு போன்றோர் தொடக்கம் இன்றும் எம்மோடு வாழும் பல பாதிரிமார்களை நாம் பட்டியற்படுத்த முடியும். தேசத்துக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அரசியல் நிலைப்பாடாகவே இதனை நோக்கமுடிகிறது.

## யுத்தத்திற்குப் பின்னர் சமயங்களின் நிலை

தமிழர் விடுதலைப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் விளைவாக சிங்களபௌத்த தேசியவாதம் தன் பெரும்பான்மை அதி காரத்தை மீளவும் நிறுவிக்கொண்டது. சிறுபான்மையினரான இஸ்லா-மியர்களையும் அதிகாரத்தால் ஒடுக்க தொடர்ச்சியாக முனைந்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. யுத்தத்திற்குப் பின்னர் மத சுதந்திரம் என்பது கேள்விக்குரிய ஒன்றாக மாறியது. பௌத்த துறவிகளை மையமாகக் கொண்டு இயங்கும் பொதுபலசேன, இராவணபலய, ஜாதிக ஹெல உறுமய போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் மதசுதந்திரத்திற்குத் தடையாக அமைந்தன. இது மதங்களுக்கிடையே முரண்பாடுகளை உருவாக்கி யது. குறிப்பாக அளுத்கம, பேருவளை போன்ற இடங்களில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டமை, ஹலால் முத்திரைக்கு எதிரான செயற்பாடு கள், இந்து மதக் கோயில்களான தம்புள்ள பத்திரகாளி அம்மன் கோயில், கொழும்பு பூமாயி அம்மன் கோயில் போன்ற கோயில்களில் சிலைகள் உடைப்பு மற்றும் கொள்ளைகள், அதேபோன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்பட்டமை போன்ற துயர சம்பவங்கள் மதவாதத்தின் எல்லையற்ற செயற்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையில் சமயம் மற்றும் சமய அடிப்படையிலான அடை யாளம் என்பன தொடர்ச்சியாக மோதலை உருவாக்குகின்றதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக முஸ்லீம் மக்களுக்கு எதிரான பிரசாரங்கள், வெறுப்புணர்வு, இழிவுபடுத்தல்கள், வன்முறை மற்றும் கலவரங்கள் அதி-கரித்துக் காணப்படுகின்றன. (நடீன்வன்னிய சிம்ம, 2008, ப.2) 2018இல் தனிநபர் பிரச்சினை சமய, இன அரசியலாக மாற்றப்பட்டு அம்பாறை, கண்டி பிரதேசங்களில் முஸ்லீம் விரோத வன்முறையாக வடிவெடுத்தது. இவ்வாறான நிகழ்வுகளின் பின்னே உள்ளூர் சூழமைவுகளும் இயக்கவி யல் நிகழ்வுகளும் முக்கிய காரணமாகின்றன. அதேவேளை அரச மற்றும் அரசியல் நிகழ்சிநிரல்கள் சிலவும் இதற்கு காரணமாக அமைந்து விடு கின்றன. ஈஸ்டர்தாக்குதல் தொடர்பிலான முதற் குற்றச்சாட்டுக்கள் முஸ்லீம் - கத்தோலிக்க மோதுகை வடிவமாகக் காட்டப்பட்டது. தற்போது சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தமே இம்முரண்பாட்டின் ஆதார சுருதி எனச் அறியப்படுகிறது. சிறு-பான்மைச் சமயங்களை மோதவிட்டு அரசியல் இலாபமீட்டும் பேரினவாத செயற்பாடாக அமையும் நிகழ்ச்சி நிரல்களுக்கு இதனை உதாரணப்படுத்தலாம்.

ஒன்றாய் ஆயுதமேந்திப் போராடிய கத்தோலிக்க, கிறிஸ்தவ, இந்துத் தமிழர்கள் பலவாறு முரண்படுவதை அண்மைக்காலத்தில் அதிகம் காணமுடிகின்றது. இலங்கைச் சூழலுக்குச் சற்றேனும் பொருந்தாத இந்துத்துவா அமைப்பான சிவசேனையை மறவன்புலவு சச்சிதானந்தன் நிறுவியதோடு பௌத்தமும் இந்துசமயமும் இந்தியமதங்கள், சகோதரமதங்கள் என "சிங்கள பௌத்தத்துக்கு" கரம் நீட்டுவதோடு போராட்டச் சூழலில் ஒன்றாய்த் தமிழராய் இந்துக்களுடன் இருந்த கிறிஸ்தவர்களையும் தமிழ்பேசும் மக்களான முஸ்லீம்களையும் ஆபிரகாமிய மதவாதிகள் எனப் பிரித்தாளுதல் "சமய அரசியலின்" பாற்பட்டதாகும். இன்றைய நிலையில் இந்திய இந்துத்துவாச் சிந்தனையின் ஊடுருவலும் தெருக்களில் பெருவெளிநிலங்களில் திடீரென முளைத்துவரும் சிவலிங்கங்கள், பிள்ளையார் உள்ளிட்ட தெய்வங்கள் தமிழடையாள உருவாக்கமாகக் கருதப்படினும் அவையும் ஒருவித நில ஆக்கிரமிப்பே சமய அரசியலே. கடும்போக்கு இந்துக்களின் இச்செயல்முறைகள் அவர்களின் பிரமாணநூல்களுக்கு எதிரானவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். பௌத்த, இஸ்லாமியம், கிறிஸ்தவ மதங்களுக்கு இருக்கும் நிறுவனமயப்பட்ட தன்மை இந்துக்களுக்கு இலங்கையில் இல்லை. சமயத்தலைவர்களும் இல்லை. இன்று கலாநிதி ஆறு.திருமுருகன் அவ்விடத்தை பெற முயற்சித்து வருகின்றார். தலைமையும் நிர்வாகக் கட்டமைப்புமற்ற தன்மையினால் இந்துசமயம் பெரும் மோதல்களில் பங்குபற்றாதிருக்கிறது என்றே கருதவேண்டும்.

சிங்கள பௌத்தமானது சிங்கள பௌத்தர் இல்லாத, தமிழர் நிலங்களில் ஏதேட்சையதிகாரத்தின் வழி பௌத்த அடையாளங்களை ஏற்படுத்தி வருகிறது. இலங்கை இராணுவம், பொலிஸ் என்பன இருந்த - இருக்கின்ற இடங்களெல்லாம் விகாரைகள் தோன்றுகின்றன. புத்தரும் விகாரையும் ஆக்கிரமிப்பின் அடையாளங்களாகவே நோக்கப்படுகின்றன. இவற்றுக்கு எல்லாம் குரல்கொடுக்காது "கள்ளமௌனம்" காத்த சச்சிதானந்தம் குருந்தூர் மலையேறி பிக்குவுடன் இணைந்து வழிபாடியற்றியமை சமய வரசியலின் அடுத்தகட்ட நகர்வாக, இந்துக்களாலேயே ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்வாக அமைந்தது.

"மண்ணின் மைந்தர்களாய்" ஒன்றுபட்டு வாழ்ந்த தமிழ் கிறிஸ்த்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரில் கேதீஸ்வர வளைவை உடைத்தெறிந்தமை நிதந்தரப்பகைமையை உருவாக்கும் தருணத்தை ஏற்படுத்தியது. இருசமயத்தவரது நல்லிணக்கமும் புரிந்துணர்வும் சிறுபான்மைத் தமிழர்க்கு மிகவும் அவசியமானது ஆகும். பொதுவில் சமயமுரண்பாடுகளின் பின்னணியில் சமயப் பிரசாரம், கலப்புத் திருமணம், நெறிமுறையற்ற மதமாற்றங்கள் என்பன அடிப்படையாக அமைகின்ற அதேவேளை ஒருவருக்கோ அல்லது குறிப்பிட்ட குழுவுக்கோ மற்ற நபர் மீதோ குழு மீதோ இருக்கும் காழ்ப்பு (பொருளாதாரம், நிலம், அரசியல், சாதி, பிராந்தியம், சமூக அந்தஸ்து...) வெளிப்படுவதற்கான, வன்முறை பிரயோகிப்புக் கான வழிமுறையாக "சமயவுணர்வு" அரசியல் மயப்படுத்தப்பட்டு பிரயோகிக்கப்படுகின்றது.

## சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை

இலங்கையின் 2015ஆம் ஆண்டுக்கான சர்வதேச மதச் சுதந்திர அறிக்கையில் பின்வரும் விடயங்கள் காணப்படுகின்றன.

1) இலங்கையரசியலமைப்பு தனிநபர் மத சுதந்திரத்துக்கு முதன்மை யளித்த போதும் நடைமுறையில் அவ்வாறில்லை.

2) உள்ளூர் காவல்துறை மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகள் பௌத்த தேசியவாத நிறுவனங்களுடன் மத வன்முறை நிகழ்வில் செயற்படுவதாகக் காணப்படுகின்றனர். தங்களை நியாயப்படுத்த பழைய சுற்று நிரூபங்களை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

3) 2014 இல் முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பௌத்த பிக்குகள் சம்பந்தப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் எந்தவிதமான கடுமை யான சட்டநடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

4) கிறிஸ்தவ, முஸ்லீம் பிரார்த்தனைக் கூட்டங்கள் பல்வேறு கார ணங்கள் கூறி தொடர்ச்சியாக மூடப்பட்டு வருகின்ற அதேவேளை தமிழர் நிலங்களில் (சைவ, கிறிஸ்தவ) புத்தர்சிலைகள் கட்டப் படுகின்றன.

5) இலங்கை தேசிய கிறிஸ்தவ நற்செய்திக் கூட்டணி, (NCEASL) 2014ஆம் ஆண்டில் தேவாலயங்கள் மீது "96" வன்முறைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்கள் நிகழ்ந்ததாகக் கூறுகிறது. அதில் 87 விடயங்கள் வழக்குகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

6) முஸ்லீம்களுக்கான செயலகம், (SFM) வன்செயல்கள், உடற் பலப் பிரயோகம், வன்சொல் உள்ளிட்டமையும், மதஸ்தலங்களை அழிக்க, அசுத்தப்படுத்த முற்பட்டல் உள்ளிட்ட "82" சம்பவங் களைப் பதிவு செய்துள்ளது.

7) மத்திய கொழும்புப் பகுதியில் பாரம்பரிய இந்து சமய உற்சவங்களில் செல்லும் ஊர்வலத்தை (முத்துமாரியம்மன் கோயில்) முஸ்லீம்கள் தடுக்க முற்பட்டராயினும் இருதரப்பும் சமரசமாயின.

8) பொதுபலசேன இயக்கம் (BBS) சிறுபான்மை இனத்தையும் மத உறுப்பினர்களையும் நோக்கி நாட்டினுடைய சிங்களப் பேரினவாத பௌத்த மக்களின் மேலாதிக்கத்தையும் விரோதமான முறையில் பிரசாரச் செயற்பாடுகளையும் ஊக்குவிப்பது இன்னமும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. (சர்வதேச மதச் சதந்திர அறிக்கை, 2015)

2021 ஆம் ஆண்டு அறிக்கையிலும் இதைவிடப் பெரியளவில் வேறுபட்ட தன்மையோ நல்லிணக்கம் சார்ந்த பெரிய முன்னேற்றமோ காணப் படவில்லை. 2019 ஈஸ்டர் தாக்குதல் மத, இன முறுகலை இன்னும் வலுப்படுத் தியுள்ளது. இதனை வலுகுன்றச் செய்யுமாறு ஐ.நா.சபை கோரியுள்ளது. ஆனால் மாறாக இலங்கையரசு "வன்முறையான தீவிரவாத மதசித்தாந்தத்தை இல்லாமல் செய்வது" தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறுபான்மையினரை கைதுசெய்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். புனர்வாழ்வு என்ற போர்வையில் இது அரசிற்கெதிரானவர்களை ஒடுக்கப்பயன்படலாம் என சர்வதேச மன்னிப்புச்சபை கருதியதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் காணப்படும் நான்கு சமயங்களுள் பெரும்பான்மையான மக்களைக்கொண்ட சமயம், தன்தன் பிராந்தியத்தில் பிறசமயத்தாரை ஒடுக்குவதையும் தேசியரீதியில் சிங்கள பௌத்தம் ஏனைய இலங்கை யர்களின் சமயங்களை ஒடுக்குவதையும் அவதானிக்க முடிகிறது. சமயங்கள் "மனிதர்களை மனிதர்களாக வாழவைக்கத் தோன்றியவை" என்றே கூறப்படுகின்றன. ஆனால் அவை செய்யும் அரசியல்கள், வன்முறையையும் கலவரங்களையும் ஒடுக்குமுறையையும் வளர்த்து விடுவனவாகவே அமைந்து வருகின்றன. (Chandrakanthan,v., 1995, pp.42-52 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி விடயங்களினூடாக சிறுபான்மை மதங்கள் தத்தமக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டாலும் அதனை ஓரளவேனும் தீர்க்கவும், சமர சங்காணவும் முற்படுகின்றன. ஆனால் சிங்கள பௌத்த தேசியவாதப் பெரும்பான்மையானது சிறுபான்மை சமயத்தவரை உடல், உளரீதியிலும் நிலம், பண்பாடு, பொருளாதாரம், அரசியல் ரீதியிலும் அடக்கியாள விரும்பு-வதையும் அதற்கு அரச ஆதரவுடன் பொதுபலசேன முதலான அமைப்பு-க்கள் கடுமையாக உழைத்து வருவதையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இலங்கையிற் தொல்லியற் திணைக்களத்தின் செயற்பாடுகள் தமிழர்களின் தொல்சமயத்துக்கு - பௌத்துக்கு நிகரான அல்லது முற்பட்ட இந்துசமயத்துக்கு எதிரானதாகவே அமைந்துள்ளது என 2021ஆம் ஆண்டுக்கான சர்வதேச மதசுதந்திர அறிக்கை குறிப்பிடுகிறது. இத்திணைக் களமானது குருந்தூர் ஆதி ஐயனார் கோயில் இருந்த இடத்தை பௌத்தத்துக் குரியதாக அடையாளப்படுத்தியது. தேசபாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் கிராமியமேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் தலைமையில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், இராணுவ வீரர்கள் சகிதம் புத்தர் ஸ்தாபிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. அதேவேளை அநுராதபுர தடைசெய்யப்பட்ட பிராந்தியங்களுள் இந்துக் கோவில்களின் எச்சங்கள் இருப்பதாக தமிழ் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பொலநறுவையில் சிங்கள, பௌத்த அடையாளங்கள் பெறும்முக்கியத்துவம் அவற்றுக்குச் சமமாக இந்துக் கோயில்களுக்கு வழங்கப்படவில்லை என்பதும் அவை பேணப்படாது சிதைவுறுகின்றன என்பதும் யாவரும் அறிந்தது. இவை இலங்கை அரசின் சமய அரசியலை பௌத்தமனப்பாங்கைத் தெளிவு படுத்துகின்றன. மிக அண்மைக்காலத்தில் கட்டப்பட்ட தையிட்டி பௌத்தவிகாரை ஒரு பௌத்தர்கூட இல்லாத இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இது சமய, அரச அதிகாரத்தின் வன்கொடுமையின் அடையாளமே. இன்றைய இலங்கையின்பொருளாதாரச் சிதைவுச் சூழல், புத்திசாலிகள் வெளியேற்றம், ஸ்திரமற்ற அரசு, மக்கள் போராட்டம் என அனைத்து விடயங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதன் பின்னணி என்ன என ஆராயின் இலங்கை அரசுகள் காலந்தோறும் விசுவாசத்துடன் பின்பற்றி வந்த சமய, இன ஒடுக்குமுறைகள், திட்டமிடப்படாத பொருளாதாரம் போன்றனவே எனலாம். நடைபெற்ற யுத்தம் பொருளாதார சிதைவையும் "கடன்" சுமையையும் ஏற்படுதியது. யுத்த நிறைவின் பின்பு இன்னும் கடும் போக்குவாத சமய, இன ஒடுக்கு முறையினை அரசு மேற்கொண்டமை அனைத்துமக்களும் இணைந்து இலங்கையைக் கட்டியெழுப்பும் சூழலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கவில்லை. தொடர்ந்தும் பிரிவினை வாத ஒடுக்குமுறை அரசியலையே மேற்கொண்டு வருகின்றன. கைத்தொழில், விவசாய பொருளாதாரக் கட்டமைப்புக்கள் மேலும் மேலும் ஊக்குவிக்கப்படாமல் பொருத்தமற்ற செயற்பாடுகளில் (அம்பந்தோட்ட விமான நிலையம்) ஈடுபட்டு வருகின்றது. மேலும் மேலும் கடனே பெறுதலே இலங்கையின் வாழ்வாகிப்போனது. இலங்கைப் பொருளாதார மீட்பு என்பது அடிப்படையில் இலங்கை வாழ் மக்களுக்கு இடையிலான இன, மதரீதியிலான புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்திலேயே அமைந்துள்ளது.

## 1.3 நிறைவுரை

இலங்கையினது தேசியம் என்பது இனம், மொழி, சமயம் என்ற முக்கூட்டின் வழி உருவான “சிங்கள பௌத்த” தேசியவாதமாகவே அரச அதிகாரத்தினாலும் பெரும்பான்மை இன மக்களாலும் கருதப்பட்டு வருகின்றது. இனமும் மொழியும் தேசிய இனமொன்றின் அடையாளமாக அமைதல் ஆச்சரியமன்று. அங்கு சமயமும் இணைந்து கொள்ளுதல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகின்றது. மகாவம்சப் புனைவும் அநகாரிக தர்மபாலாவின் அடிப்படைவாத கோஷமும் இந்தக் கருத்தியலை உருவாக்கின. அநகாரிக தர்மபாலாவே சிங்கள பௌத்த கோஷத்தை மக்களிடம் அதிதீவிரமாக பிரசாரம் செய்தார். அதில் அவர் வெற்றியும் கண்டார். இலங்கையின் சமய அரசியலின் தந்தை அவரே. காலனியவாதிகளால் ஒருங்கிணைக்கப்பட்ட இலங்கையில் மக்களைப் பாதித்தது அரசல்ல, கிறிஸ்தவக்காலனியமே. அதன் காலனிய சமயக் கருத்துக்கள் சுதேச மக்களை கூனிக்குறுக வைத்தன. 1833இன் பின் ஆட்சியாளர்கள் காட்டிய நெகிழ்ச்சி, சுயபாஷா விலான நவீனகல்வி, ஆங்கிலக்கல்வி, பாடநூலாக்கம் போன்ற மிஷனரி களின் சமயப்பிரசாரத்துக்கான நடவடிக்கைகள் “படித்த மத்தியதர வர்க்கத் தையும் மேட்டுக் குடிகளையும்” உருவாக்கியது. இக்கல்வி மரபின் வழிவந்த சுதேசிகள் தங்களது மொழியை, சமயத்தை சீரமைக்க முற்பட்டனர். அதில் ஆறுமுகநாவலர், சித்திலெப்பை, அநகாரிக தர்மபால போன்றோர் முக்கியமானவர்களாவார். முள்ளை முள்ளால் எடுப்பது போல கிறிஸ்தவத்தை கிறிஸ்தவ வழிமுறைகளாலேயே இவர்கள் எதிர்கொண்டனர். தத்தம் சமயத்தை சீர்திருத்தி மீட்டுருவாக்கம் செய்தனர்.

1948இல் காலனிய ஆட்சி நீக்கம் நிகழ்ந்தாலும் சோல்பரி யாப்பு வழியான, காலனியம் முன்னெடுத்த ஆட்சி முறையே தொடர்ந்தது. ஆட்சியாளர் மாறினரே தவிர ஆட்சிமுறை, ஆட்சிமொழி மாறவில்லை. அதில் முறிவோ, மாற்றமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படவில்லை. அரச இயந்திரம் அப்படியே இருந்தது. இந்தியா சுதந்திர மடைந்த காலத்தில் இந்து - முஸ்லீம் வன்முறைக் கலவரங்கள் நடந்தன. இந்தியாவை "பிரித்தல்" எனும் அறுவை வைத்தியம் நடந்ததாக உயங்கொட கூறுகிறார். அது காலனிய நீக்கமாக அமைந்தது. ஆனால் இலங்கையில் பின்காலனிய அரசு அமைதியான சூழலில் உருவாகியது. ஆட்சியாளர் மாறினும் காலனிய மரபுகள் மாறாவில்லை. 1956இல் உருவான தனிச் சிங்களச் சட்டம் நவகாலனியத்தை உருவாக்கத் தலைப்பட்டது. கிறிஸ்தவக் காலனியமானது ஆட்சிப் பொறுப்பை சிங்கள பௌத்த நவகாலனிய வாதிகளிடம் ஒப்படைத்ததாகவே சிறுபான்மையினமக்கள் உணரத் தலைப்பட்டனர்.

இலங்கை ஒரு சிங்கள, பௌத்தநாடு. ஏனைய இன, சமய, மொழிகளை கௌரவத்தோடு நடாத்துகின்ற அதேவேளை இலங்கையரசு பௌத்தத்துக்கும், பௌத்த சாசனத்துக்கும் முதன்மையும் பாதுகாப்பும் அளிக்க வேண்டும் என யாப்புச் சீர்திருத்தம் செய்யப்பட்டது. "சிங்கள பௌத்தம்" எனும் கருத்தியல் கோஷமாக நின்றுவிடாமல் அதிதீவிரமாக அமுல்படுத்தப்பட்டது. சிறுபான்மைச் சமயங்கள், இனங்கள், மொழிகள் ஒடுக்கப்பட்டன; நசுக்கப் பட்டன; இதன்வழி மதக்கலவரங்களும், இனக்கலவரங்களும் அதிகம் இடம்பெறத்தலைப்பட்டன. சிறுபான்மையினர் முன்னேறாதவாறு இனவிகிதாசார தேர்தல் முறை, வெட்டுப்புள்ளி என எல்லா வழிமுறைகளாலும் ஒடுக்கு முறைகள் நிகழ்த்தப்பட்டன. எதிர்ப்பியக்கங்கள் உருவாயின. இவை நாற்பதாண்டு கால யுத்தத்துக்கு அடிப்படையாயிற்று.

யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்பு "சமூக, சமய நல்லிணக்கம்" நிகழவேண்டும் என்ற கற்றுக்கொண்ட பாடங்கள் வழியேனும் ஐ.நாசபையின் வேண்டுகோளை, உலகநாடுகளின் ஆலோசனைகளையேனும் ஏற்காது உதாசீனம் செய்த இலங்கை அரசுஒடுக்குமுறைக்கு இன்னும் பல்வடிவங் களைக் கொடுத்துவருகிறது. அதில் முக்கியமானது பொதுபலசேனா, இராவணபலய, ஜாதிக ஹெல உறுமய முதலான கட்சிகளின் தோற்ற மாகும். இன்றைய இலங்கையரசியலை ஆட்டிப்படைப்பவர்களாக, ஆட்சிய திகாரத்தைத் தீர்மானிப்பவர்களாக பௌத்த பிக்குகளே காணப்படுகின்ற னர். ஞானானந்ததேரர் முதலானோர் முன்னெடுததுவரும் பிறசமயங்களை இழிவுபடுத்தல், அவற்றின் வழிபாட்டுத் தலங்களின் கட்டங்களை நீக்குதல், வழிபாடுகளைக் குழப்புதல், பழக்கவழக்கங்களைக் கொச்சைப் படுத்துதல், சமய உரிமைகளுக்குள் தலையிடுதல், உரிமையைத் தரமறுத்தல், ஏனைய சமய வழிபாட்டுத் தலங்களை, காணிகளை வலோத்காரமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையகப்படுத்தல், அவற்றில் புத்தர்சிலைகளை நிறுவுதல், விகாரை களைக் கட்டுதல் முதலான செயற்பாடுகள் சமயங்களின் ஒருங்கிணைந்த சூழலை முழுமையாகக் குழப்பும் அரசியலாயும்சர்வதிகாரமாகவும் அமை- கிறது. இதற்கு இராணுவ, பொலிஸ் பாதுகாப்பும் உண்டு.

பௌத்த பிக்குகள், சிங்கள, பௌத்த அடிப்படைவாதிகள் செய்யும் அராஜகங்களை மௌனமாகப் பார்த்து நிற்கும் பொலிஸாரும் இராணுவமும் பிற சமய, இன, மக்கள் அமைதிவழியில் முன்னெடுக்கும் போராட்டங்களில் கலந்துகொள்ளும் பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரை வன்முறைக்கரங் கொண்டு அடக்குவதை நாளாந்த பத்திரிகைச் செய்திகள் உறுதிப்படுத்தி வருகின்றன. சிங்களவரோ பௌத்தர்களோ இல்லாத சிறுபான்மையினர் மட்டுமே வாழ்கின்ற பிராந்தியங்களில் புத்தர்சிலை களும், விகாரைகளும் மேற்கிளம்பி வருகின்றன. இதற்குச் சமாந்தரமாக இதனை எதிர்கொள்ளலாக சிவலிங்கங்கள், மாதா சொரூபங்கள் தமிழர் பிராந்தியங்களில் மேற்கிளம்புவதையும் காணமுடிகிறது.

இலங்கை பற்றிய 2015, 2021ஆம் ஆண்டுகளுக்கான சர்வதேச மதச்சுதந்திர அறிக்கை இலங்கையின் மிக மோசமான சமய அரசியல் செயற்பாடுகளைப் பட்டியற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ் வாறான பகைப்புலமே இலங்கையின் இன்றைய நெருக்கடிக்கு அடிப்படை என உணரினும் இலங்கையரசு தன் மதவாதக்கொள்கையை ஒடுக்குமுறை யைக் கைவிடத் தயாராகவில்லை என்பது துயரந்தரும் செய்தியே.

சமயம் என்பது அன்பையும் அமைதியையும் சமாதானம் நிறைந்த வாழ்வையும் நல்குவதை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால் இலங்கைச் சூழலில் இருக்கும் சிறுபான்மைச் சமயங்களை பெரும்பான்மைச் சமயம் காலந் தோறும் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கி வருகின்றது. தேசிய அளவில் சிங்கள பௌத்தம் ஏனைய சமயங்களை ஒடுக்கி அரசியல் செய்கிறது. ஆகவே மாற்றம் என்பதை முதலில் தமிழர்களாகிய எம்மில் இருந்தே ஆரம்பிக்கவேண்டும். புதிது புதிதாக உருவாகிவரும் மதப் பிரிவினை வாத - இந்துத்துவா அமைப்புக்களையும் அடிப்படைவாத கிறிஸ்தவ இஸ்லாமிய அமைப்புக்களையும் விலக்கி புரிந்துணர்வு வழியிலான நல்லிணக்கச் சூழலை உருவாக்குதல் வேண்டும். இந்த சமய,சமூக நல்லிணக்கத்தின் திரட்சி பின்காலனிய இலங்கையின் வன்முறைசார்ந்த சமய அரசியலில் இருந்து தமிழர்களுக்கு - தமிழ்பேசும் மக்களுக்கு விடுதலையைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை


உயன்கொட ஜயதேவ, (த.மொ. சண்முகலிங்கம்,க.), 2016,இலங்கையில் பின்காலனித்துவ அரசு, ஹரே பிரின்டேர்ஸ், கொழும்பு.

ஃபனான் ஃப்ரான்ஸ், (த.மொ. நடராஜ்.வி), 2002, ஒடுக்கப்பட்ட-வர்கள்: விடுதலையின் வடிவங்கள், விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர்.

குருபரன் குமாரவடிவேல், 2017, அரசம் மதமும் ஒன்றை மற்றொன்று வரையறை செய்தல்: பிரச்சனைகளும் இலங்கையில் சீர்திருத்தத்திற்கான வாய்ப்புக்களும், யாழ்.மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியம், யாழ்ப்பாணம்.

சண்முககலிங்கம்,க., 2016, இலங்கையில் பௌத்தமும் தேசியவாதமும் கணநாத் ஒபயசேகரவின் ஆய்வுகள் குறித்த ஓர் அறிமுகம், சமூகவெளி படிப்பு வட்டம், யாழ்ப்பாணம்.

நடீன் வன்னியசிங்கம, கசுன்பதிராஜ, மொகமட் பஸ்லான், டனுஷ்கா ஜயவி-க்கிரம், 2008, இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மதங்களுக்கிடையிலான மோதல்கள், இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேசநிலையம், கொழும்பு.

பாஸில்,எம்,எம்.,(ப.ஆ), 2020, போருக்குப் பிந்திய அரசம் சமூகமும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

யோகராஜா, கொட்ப்ரி, 2021, இலங்கையில் நிலைமாற்றுகால நீதியில் சமயத்தின் வகிபாகம் உலக சுவிஷேச ஐக்கியத்துவம், இலங்கை.

வைத்திலிங்கம், செ., 1951, இலங்கை இந்தியர் இன்னல், சிறுபான்மையோர சிறுமைப்படுத்தும் சிங்கக் கொடி, கொழும்பு.

ஹெட்டிகே சிறி, (த.மொ. சந்திரசேகரன்,ச., கருணாநிதி,மா.), 2017, நிதான-மான சமூகத்தை நோக்கி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

ஜயவர்த்தன குமாரி, 2011, இலங்கையின் இன, வர்க்க முரண்பாடு சிங்கள - பௌத்த உணர்வு நிலையின் எழுச்சி (1883 - 1983), குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

ஜயவர்த்தன குமாரி, (த.மொ. சண்முகலிங்கம்,க.), 2015, அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை இலங்கையில் காலனித்துவ முதலாளித்துவ வகுப்பின் தோற்றம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chandrakanthan,v., 1995, Catholic revival in post - colonial Sri Lanka, Socilal and economic development centre, Colombo.

Coomaraswamy, Radhika, 1987, Myths Without Conscience - Tamil and Sinhalese Nationalist Writings of the 1980s', in Ethnicity and social Change in Sri Lanka, Social Scientists' Association , Colombo.

Uyangoda, j., 1999, A State of Desire? Some reflections on the unreformability of Sri Lanka's post-colonial State in Hettige, S.and Meyer,m.(eds.) Sri Lanka at Crossoads. New Delhi - macmillan.

Uyangoda, j. 2011, Travails of State Reform in the Context of Protracted Civil War in Sri Lanka in Stokke, k. and Uyangoda, I. (eds.) Liberal peace in Question - Politics of state and Market Reform in Sri Lanka. New York and London - Anthem.

## கட்டுரைகள்

ஒபெயசேகர கணநாத், கொம்பிறிஜ் றிட்ச்சேர்ட், (த.மொ. நாவுக்கரசு,ந.), 2005, "புரொட்டெஸ்ரன்ட் பௌத்தம்", இலங்கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்: தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள் இரண்டாவது தொகுதி 1980 - 1999, சமூகப் பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம்.

ஹரிஸ் எலிசபெத், (த.மொ, பத்மநாதன்,சொ.) 2005, "நெருக்கீடும் போட்டியும்: 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பௌத்தத்தை கிறிஸ்துவ மிஷனறிகள் எதிர்கொண்டமை", இலங்கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்: தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள் இரண்டாவது தொகுதி 1980 - 1999, சமூகப் பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம்.

## அறிக்கைகள்

2015 இற்கான சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை, ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பணியகம்,ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம். 2021 இற்கான சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை, ஜனநாயகம்,மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பணியகம்,ஐக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மறை மாவட்டக் குருக்கள் ஒன்றியத்தால்
## ஏற்பாடு செய்யப்பட்ட
## ஆயர் வ.தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரைகள்

01. பொருள் : **பாலம் அமைத்த பணியாளர் 28.07.2008**
பேச்சாளர்: அருட்பணி நீ.மரியசேவியர்
தலைமை : அருட்பணி விக்ரர் பிலேந்திரன்

02. பொருள் : **தலைமைத்துவம் 21ம் நூற்றாண்டை நோக்கி ஓர் உளவள ஆன்மீகக் கண்ணோட்டம் 24.08.2009**
பேச்சாளர்: அருட்பணி சா.ம.செல்வரட்ணம் அ.ம.தி
தலைமை : அருட்பணி அருளானந்தம் யாவிஸ்

03. பொருள் : **அச்சுவேலி எஸ்.தம்பிமுத்துப்பிள்ளை வாழ்வும் பணியும் 07.08.2010**
பேச்சாளர்: பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
தலைமை : அருட்பணி அருளானந்தம் யாவிஸ்

04. பொருள் : **அருளாளர் யோசவ் வாஸ். எதிர்கொண்டசவால்களும் நிலை நாட்டிய சாதனைகளும் 21.10.2011**
பேச்சாளர்: பேராசிரியர் வண.ஞா.பிலேந்திரன்
தலைமை : அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ்

05. பொருள் : **முந்நாள் சுதேச யாழ். மறைமாவட்ட ஆயர்கள் இருவரதும் மறைக்கல்விப் பணி**
பேச்சாளர்: அருட்பணி கு.யே.அன்ரனிபாலா
தலைமை : அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ்

06. பொருள் : **யாழ். மறைமாவட்ட மூன்றாம் நிலைக்கல்வி பற்றிய வளர்ச்சிக்கான சிந்தனைகள் 28.10.2013**
பேச்சாளர்: பேராசிரியர் மா.சின்னத்தம்பி
தலைமை : அருட்பணி இ.ஸ்ரலின்

07. பொருள் : **மன்னார் மறைசாட்சிகள் உண்மைகளும் தாக்கங்களும் 16.02.2015**
பேச்சாளர்: அருட்பணி ச.வி.ப.மங்களராஜா
தலைமை : அருட்பணி இ.ஸ்ரலின்

08. பொருள் : **இலங்கையில் தமிழர் பிரச்சினையின் பின்னணியில் திருவிவிலியம் கூறும் நீதியும் மீளிணக்கப்பாடும் 25.02.2016**
பேச்சாளர்: அருட்பணி ஜெயபாலன் குரூஸ்
தலைமை : அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்
அருட்பணி . யோ.யோ.மவுலிஸ் -
குருக்கள் ஒன்றியத் தலைவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09 பொருள் : **தலத்திருச்சபையின் தலைமைத்துவ திருப்பணிகள் பவுல் அப்போஸ்தலரின் பணித்துவ செல்நெறிகள் பற்றிய ஓர் உசாவல். 28.04.2016**

பேச்சாளர்: பேராசிரியர் அருட்பணி A.J.V. சந்திரகாந்தன்

தலைமை : அருட்பணி . யோ.யோ.மவுலிஸ் -

10. பொருள் : **அரசும் மதமும் ஒன்றை மற்றொன்று வரையறை செய்தல் பிரச்சினைகளும் இலங்கையில் சீர்திருத்தத்திற்கான வாய்ப்புக்களும் 14.12.2017**

பேச்சாளர்: சட்டத்தரணி குமாரவடிவேல் குரபரன்

தலைமை : அருட்பணி எம்.டேவிட்

11. பொருள் : **வெற்றி மீதான மனப்பாங்கின் வகிபாகம் 13.12.2018**

பேச்சாளர்: பேராசிரியர் தி.வேல்நம்பி

தலைமை : அருட்பணி எம்.டேவிட்

12. பொருள் : **நல்லாயனாய் ஆயர் வ.தியோகுப்பிள்ளை சமய, சமூக, அரசியல் பணிகள் ஊடாக வெளிப்படும் தலைமைத்துவம் 17.10.2019**

பேச்சாளர்: அருட்பணி யோண் பெப்ரிஸ் அன்ரனி

தலைமை : அருட்பணி அ.பெ.பெனற்

13. பொருள் : **கிறிஸ்தவப் பின்நவீனத்துவம் - ஒரு சமகாலப் பார்வை 25.10.2021**

பேச்சாளர்: அருட்கலாநிதி J.C.போல் றொகான்

தலைமை : அருட்பணி அ.பெ.பெனற்

14. பொருள் : **கர்தினால் பெஞ்சமின் தோமஸ் சூரே அ.ம.தி அவர்களின் மேய்ப்புப்பணி, கல்விப்பணி சார்ந்த பங்களிப்புக்கள் ஒரு திறனாய்வு**

பேச்சாளர்: பேரருட்திரு. கலாநிதி P.அன்ரன் ரஞ்சித்

தலைமை : அருட்பணி. யோசப் பிரான்சிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தி.செல்வமனோகரன்:** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்து மெய்யியல் பட்டதாரியான இவர் அத்-துறையில் கலாநிதி பட்டத்தையும் நிறைவு செய்துள்ளார். இப்பல்கலைக்-கழகத்தின் இந்துக் கற்கைகள் பீட, சைவசித்தாந்தத் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமை புரிந்து



வருகிறார். மெய்யியல், இலக்கியவியல், கலையியல், உள்ளிட்ட துறைகளில் ஊடாடித் தனக்கான விமர்சனச் சிந்தனைசார் நவீன அணுகு முறைகளுடன் கூடிய கோட் பாட்டாக்க மரபை உணர்ந்து உருவாக்குபவர். இவற்றின் வெளிப்பாடாக சர்வதேச ஆய்வரங்குகளிலும், இதழ் களிலும் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை எழுதி வருபவர். நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஏடுகள், புழங்கு பொருட்கள் போன்றவற்றின் சேகரத்திலும் அதிக ஈடுபாடு காட்டி வருகிறார். ஆவணமாக்கல் செயற்பாட்டாளராக பல்வேறு முயற்சிகளைச் செய்து வருகின்றமையும் குறிப் பிடத்தக்கது.

ஈழத்தின் கிடைத்தற்கரிதான நூறு வருடங்களுக்கு முற்பட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை மீள் பதிப்புச் செய்துள்ளார். மூன்று தொகுப்பு நூல்களும் இவரால் வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர இலங்கை யின் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் (2014), தமிழில் மெய்யி யல் (2017) சொற்களால் அமையும் உலகு (2018) காஷ்மீர சைவமும் சைவசித்தாந்தமும், (மீள்பதிப்பு-2020) நாயன் மார் பாடல்கள் (2020) முதலான நூல்களை ஆக்கியளித் துள்ளார். பேராசிரியர் கா.சிவத்தம்பி, தமிழ்த்தூது தனி நாயகம் அடிகளார் உள்ளிட்ட பல்வேறு அறிஞர்களுக் கான நினைவுப்பேருரைகளை இவர் ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org